www.tamilarangam.net

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

# வணிகர் வரலாறு

ஆக்கியோன் :

திரு. மு. வே. சிவரத்தினம் அவர்கள்

சமாதான நீதிவான்

இளைப்பாறிய வித்தியாதரிசகர்

வெளியிட்டோர் :

பாட்டா வமிசவழியினர் சங்கம்

சிந்துபுரம், வட்டுக்கோட்டை.

1966.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

# முகவுரை

இற்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் வேறெந்தச் சாதியினரும் பெற்றிராத நாகரிகம் உள்ளவர்களாய், கடல்கடந்து வாணிபஞ்செய்து கொண்டு, தமது தாய்மொழியாகத் தமிழ்மொழியைப் பேசியும், தம் சொந்தச் சமயமாகப் பரந்த நோக்குடைய இந்துசமயத்தைத் தழுவியும் வாழ்ந்த ஓர் இனத்தவர் சிந்துவெளியில் விளக்கமுற்றிருந்தனர். பண்டு ஒருகாற் சீர்பெற்ற நகரங்களும், சிறப்புமிக்க சாதியினரும் பின் சீர்குன்றியமைக்குச் சான்றுகள் பல உள. அவ்வாறே மேலேகாட்டிய இனத்தவர் பொலிவிழந்தனர். காலப்போக்கில் இவர் பலபடக் கலந்தனர் எனினும், இவர் நேர் வம்சவழியினர் இன்றும் ஈழநாட்டில் பல பகுதிகளில் வாழ்கின்றனர் என்னும் இதிகாச உண்மையை எடுத்துக்காட்டுவது இந்நூலின் இலக்காயினும், தமிழுலகில் தமிழரைத் தாழ்வுறுத்தும் சில கண்மூடிப் பழக்க வழக்கங்களையும், தப்பபிப்பிராயங்களையும், சுயநலமிகள் ஆதரித்துவருகின்ற சில சாபக்கேடுகளையும் சிந்தனைச் சிறப்புவாய்ந்த தமிழுலகுக்கு எடுத்துக்காட்டவேண்டிய அவசியம் நமக்குத் தோன்றலாயிற்று.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பத்திரிகை வாயிலாகவும், மேடைகளிலும் இக் கேடுகளைக் கடிந்து குரலெழுப்பும் பன்மொழிப் பேரறிஞர்களும், பண்டிதர்களும் நம்முட்டோன்றியிருக்கின்றனர் என்பதும், ஈழநாட்டில் தமிழரசுக் கட்சியும், தென் பாரதத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும் இத்தொண்டினை இதயபூர்வத்துடன் செய்துவருவதும் பெருமகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

அரிய இலக்கியக் குறிப்புக்களைத் தந்துதவியும், இந்நூலினைப் பிரதிபண்ணியும், பிழையின்றி அச்சிடப்பணிபுரிந்தும் உதவிய அன்பர்களுக்கு எமது நன்றி உரித்தாகுக.

இந்நூலினை அச்சிட்டுத் தமிழ்மக்கட்குதவிய பாட்டாவம்ச வழியினர் சங்கத்தினைப் பாராட்டுகின்றேன்.

பகுத்தறிவுலகம் இந்நூலினை ஏற்றுக்கொள்ளும் என்பது எமது திண்ணம்.

வணக்கம்.

மு. வே. சிவரத்தினம்

சர்வோதயம்,
மாத்தளை,
30-11-65.

# வெளியீட்டுரை

புதிய ஆராய்ச்சியின் பயனாக வரலாற்று உண்மைகள் பல வெளிவருகின்றன. இவ்வாராய்ச்சிகளை ஏதுவாகக்கொண்டு இந்நூலாசிரியர் வணிகர் வரலாறு என்னும் நூலை ஆக்கித் தந்துள்ளனர்.

நாம் யார்? எம் மூதாதையரின் பண்டைய நாகரிகச் சிறப்பு யாது? என்பவை போன்றவற்றை இந்நூல் விளக்கி மக்கள் யாவரும் ஒரு குலத்தினராய், ஒரே தரத்தினராய் வாழவேண்டுமென அறைகூவுகின்றது.

இப்பணியில் யாவரும் ஒத்துழைக்கும் இதே சமயத்தில் தமிழ்மக்களின் உயர்வுகூறும் அரிய பல வரலாற்று உண்மைகளை அழிந்துபோகவிடாமல் பாதுகாப்பது தமிழர்களாய எமது கடமையாகும்.

இத்துறையிலே இந்நூலாசிரியர் நெடுங்காலமாக உழைத்து, இதற்கு முன்னரும் 'தமிழன் புதைபொருள்' என்ற நூலை ஆக்கியுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்நூல் ஆராய்ச்சிக்கு உதவிய நூல்கள் கட்டுரைகள், அறிஞர்களின் கருத்துக்கள் ஆதியன:—

1. சிலப்பதிகாரம்
2. பாரதிபாடல்
3. Eastern Religions and Western Thought
   Prof: S. Radhakrishnan
4. Discovery of India: Pandit J. NEHRU
5. திருக்குறள்
6. What happened in History: Gordon Childe
7. Comparative Religion: A. C. Bouguet
8. Chronology of India: Mabel Duft.
9. A Concise History of Ceylon University of Ceylon
10. குறுந்தொகை ஆராய்ச்சி: இராஜ-சிவ-சாம்பசிவ சர்மா
11. பெரும்பாணாற்றுப்படை
12. ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்
13. புறநானூறு
14. நற்றிணை
15. தொல்காப்பியம் பொருளதிகாரம்
16. திருக்கோவை
17. Prof: Arnold Toynbee
18. Rev. Fr. Gnanapragasar
19. விபுலானந்த அடிகள்
20. Ref C. F. Andrews
21. மகா வித்துவான் பிரம ஸ்ரீ சி. கணேசையர்
22. கலாநிதி கணபதிப்பிள்ளை
23. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்
24. Rev. Fr. R. Herals
25. Dr. R. L. Spittle

# அணிந்துரை.

## கௌரவ எம். எச். முஹம்மத் அவர்கள்

அமைச்சர், தொழில், தொழில் வசதி, வீடமைப்பு அமைச்சு.

ஒரு சமுதாயத்தின் பழமை வரலாறு அந்தச் சமுதாயத்தின் சிறப்பிற்குத் தக்க ஆதாரமாகும். பழமைக்கு அரண்செய்து, புதுமைக்கு முரண் ஏற்படாத இலக்கிய முயற்சிகள் அனைத்தும் வரவேற்கப்படவேண்டியதாகும்.

"வணிகர் வரலாறு" என்னும் இந்நூல் தமிழ்ப் பெருமக்களின் வணிகப் பெருவாழ்வை எடுத்துரைக்கின்றது. திரைகடல் ஓடித் திரவியம் தேடிய சிறப்பு அறபுப் பெருமக்களுக்கும், தமிழ்ப் பெருமக்களுக்கும் உண்டு. தமிழ்ப்பெருமக்களின் தனிப்பெரும் வணிக வாழ்வைச் சிறப்புடன் உரைக்கின்றது இந்நூல்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்குமுன் தோன்றிய மூத்த இனம் தமிழ் இனம் என்பதையும், கடல்கோளால் கொள்ளப்பட்ட மாநிலத்தில் நின்று சிந்துநதியோரத்தில் குடியேறிக் கால வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்ட நாகரிகமக்கள் அவர்கள்தாம் என்கின்ற உண்மையும் துணிந்து உரைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாகரிகத்தை உலகெங்கும் பரப்பிய வணிகர் பெருமக்கள் சமரச சன்மார்க்க சீலர்களாகவும், சகல கலாவிற்பன்னர்களாகவும் அமைந்து நாட்டின் தேவைக்கேற்ப நற்றொண்டு ஆற்றிய உறு பசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் அற்ற மாண்புமிக்க நாட்டைக் கண்டவர்கள் தமிழ்ப் பெருமக்கள் என்ற வரலாற்று உண்மையைக் கொண்டுள்ளது இந்நூல்.

இனம், நிறம், குலம் ஆகியவற்றினால் உயர்வு ஏற்படுவதில்லை. 'ஒன்றே குலம்; ஒருவனே இறைவன்' என்ற உயர் நெறிவழி நிற்றலால்தான் உயர்வுபெறல் முடியும் என்ற கருத்தைக் கொண்டுள்ளது இந்நூல்.

இந்நூல் ஆசிரியர் திரு. மு. சிவரத்தினம் ஜே. பி அவர்கள் கல்வித்துறையில் அனுபவம் மிக்கவர். பாடசாலைப் பரிசோதகராக இருந்து பலகாலம் அனுபவம் பெற்றவர். ஆய்ந்து, ஆதாரங்களுடன் இந்நூலை அவர் எழுதியுள்ளார். ஆசிரியரின் இம் முயற்சியைத் தமிழ் உலகம் ஏற்று வரவேற்பதாக.

இவ்வண்ணம்
அன்புள்ள,
எம். எச். முஹம்மத்.

212, பௌத்தாலோகமாவத்தை,
கொழும்பு 7.

# நூன்முகம்

திரு. ஆ. க. கந்தையா B. A. (London) அவர்கள்
Trained Graduate, Retired Super Grade Principal,
Hindu College, Chavakachcheri.

"வணிகர் வரலாறு" ஆராய்ச்சி நூல் என்பது மட்டுமல்ல, தமிழர் வரலாற்று நூலுங் கூட. நூலாசிரியர் ஆங்கிலம், தமிழ் என்னும் இரு மொழிகளையும் நன்கு கற்றுத்தெளிந்தவராகையால் இருமொழிகளிலும் உள்ள பல நூல்களைத் துருவி ஆராய்ந்து இவ்வாராய்ச்சி நூலைத் தமிழ் உலகிற்கு வழங்கியுள்ளார். ஆசிரியரின் முடிபைச் சங்க இலக்கியங்கள் முதல் இக்காலச் செய்தித் தாள்கள்வரை அரண்செய்து நிற்கின்றன. சிந்துவெளி நாகரிகம் இவ்வாராய்ச்சிக்கு அடிக்கல்லாக அமைந்துள்ளது. ஆசிரியர் புதைபொருள் ஆராய்ச்சி நூல்களில் நிரம்பிய பயிற்சிபெற்றிருக்கின்றார்.

வரலாற்றாசிரியனுக்குரிய நடுநிலைக்கொள்கையோடு தமிழ்கூறு தொல்லுலகக் கூற்றுக்களும், இக்கால நாடோடி மொழிகளும், கல்வெட்டுக்களும், ஆலயங்களில் நிலவும் வாழ்த்துப் பாடல்களும் பிறவும் ஆராயப்பட்டு மேற்கோள்களாக எடுத்தாளப்பட்டிருப்பதனை அறிஞருலகம் நன்கு வரவேற்கும்.

ஆராய்ச்சி என்பது கடினமான விடயம். அதை எவரும் புரிந்துகொள்ளும் வகையில் பழகு தமிழில்

www.tamilarangam.net



கூறுவது அதிலும் கடினமான விடயம். ஆசிரியர் இவற்றில் பெருமளவில் வெற்றிபெற்று எடுத்துக் கொண்ட பொருளை மிகத் தெளிவாக்கி யாவரும் வாசித்தறியத்தக்க வகையில் எழுதி இருப்பது பாராட்டற்குரியதாகும். ஆசிரியர் நோய்வாய்ப் பட்டிருக்கும் இந்நாளில் உலகம் உண்மையை அறிதல்வேண்டும் என்னும் அயரா ஆவலால் இந்நூல் இப்போது வெளியாகிறது.

அன்று கிரேக்கத் தத்துவஞானி சாக்கிரட்டீஸ் ஓர் உண்மையை எடுத்து முழங்கினார். அத்தாரக மந்திரம் கிரேக்க இளைஞர் பல்லாயிரவர் இதயங்களைக் கவர்ந்தது. சோம்பிக் கிடந்த உள்ளங்கள் சுறுசுறுப்படைந்தன. எங்கும் புதிய அறிவும், புதிய எழுச்சியும் உதயமாயின. பழங்கதை சொல்வோரும், மூடநம்பிக்கையாளரும் தோல்விகண்டுடைந்தோடினர். சுயமரியாதையும், தன்னம்பிக்கையும் உரம்பெறுவன ஆயின. அதனையொப்பத் தமிழரிடையே — இளைஞர்களிடையே — வணிகர் வரலாறும் நல்லதொரு பயனைப் புதியதொரு விழிப்பை விளைப்பதாக !

வணக்கம்.

(ஒப்பம்) ஆ. க. கந்தையா

செட்டியா மடம்,
வட்டுக்கோட்டை,
25—5—66.

# உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | குலம் நான்கு | 1 |
| 2. | தமிழர் நாகரிகம் | 23 |
| 3. | வணிகர் வரலாறு | 42 |
| 4. | உணவு | 56 |
| 5. | சமயம் | 65 |
| 6. | தாய் மொழிப் பற்று | 68 |
| 7. | குணங்குறிகள் | 71 |
| 8. | வேண்டுதல் | 73 |
| 9. | உலக அரங்கிலே | 75 |
| 10. | முடிவுரை | 78 |

www.tamilarangam.net

சிந்தனைச் சிற்பிகளாகுந்
தமிழ் வாலிபர்களுக்கு
அர்ப்பணம்.

— நூலாசிரியர்.

# வணிகர் வரலாறு.

## 1. குலம் நான்கு

திராவிடர் பண்டுதொட்டுச் சீர்திருத்தமுற்ற மக்களாகத் திகழ்ந்தனரென்பது சரித்திரவுண்மை யாகும். சீர்திருத்தமற்ற புயவலிமிக்க ஆரியர், இவர்களை ஆட்கொண்டனர். திராவிடர் தமக்கென வுயரிய தனி நாகரிகத்தை யுடையராயிருந்தனரெனினும், ஆரியர் விதித்த நாற்குலத்தினை ஒப்புக்கொள்ள வேண்டியவராயினர். பிரபல எழுத்தாளர் ஒருவர், தற்போது, பரத கண்டத்தில், முப்பது இலட்சம் பார்ப்பனர் தொடக்கம் அறுநூற்றெழுபது இலட்சம் தீண்டாதார் வரையும் முந்நூற்றுக்கு மேற்பட்ட சாதி வகுப்புக்கள் உண்டெனக் கூறியுள்ளனர்.

இலங்கைத் தீவில், போர்த்துக்கேயர் தமதாட்சி நிலவிய காலத்தில், அம்மன் கோவில்களை மாதாவின் கோவில்களாக்கினர். அவர்களின் ஆட்சி தொலைந்தபின்னர் மாதாவின் கோவில்கள் அம்மன் கோவில்களாயின. ஆனால் ஆரியராதிக்கம் ஒழிந்தபின்னும் அவர் விதித்த சாதிக்கோட்பாடுகள் நின்று நிலவுகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குலம் நான்கும் எவை என்பதற்கும் இக் குல முறை ஆரியர் வந்தபின் பண்டுதொட்டுத் தமிழ் உலகிற் கையாளப்பட்டு வந்தனவென்பதற்கும் இலக்கியச் சான்றுகளுள.*

"பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவும்
அந்தியுஞ் சதுக்கமும் ஆவண வீதியும்"

எனுஞ் சிலப்பதிகார அடிகளுக்கு, "குலம் நான்காகப் பகுத்த வகையால் தெரிந்த அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனச் சொல்லப்பட்டார் இருக்கும் நான்காய் வேறுபட்ட தெருக்களும், முச்சந்தியும், நாற்சந்தியும், கோயிலங்காடியும்" என அடியார்க்கு நல்லார் உரை தந்தனர்.

மறையோம்புதற்கும் அரசர் முதலியோர்க்கு ஆலோசனை கூறுவதற்கும் ஏற்ற ஒழுக்கமும் அறிவும் படைத்தோர் அந்தணரென்னும் வகுப்பினராகவும், புயவலியும், துணிபும், ஆற்றலும் படைத்தோர் அரசராகவும், திரைகடலோடித் தேசங்கள் தோறுஞ் சென்று பண்டமாற்றுச் செய்யுந் திறனுடையோர் வணிகராகவும், உழுதூண் பெருக்கவலலோர் வேளாளரெனவும் வகுக்கப்பட்டனர். இவ்வகுப்புகளை முறையே கல்வி கலாசாரத் திணைக்களமெனவும், தேசப் பாதுகாப்புத்

* சிலம்பு 'ஊர்காண் காதை' 212 — 213 அடி, உ. வே. சா. பதிப்பு. புறம் 183ஆம் செய்யுள். தொல்பொருள் மரபியல் 72, 73, 79, 81 சூ-ம்.



திணைக்களமெனவும், வர்த்தகத் திணைக்களமெனவும், உணவு விருத்தித் திணைக்களமெனவும் கூறலாம். பேரறிஞர்களும், இவ்வகுப்புக்கள் முதற்றோன்றியபோது மக்கள் யாவரும் ஒரே வகுப்பினராக இருந்தனரென்றும் கல்வி, ஒழுக்கம், துணிபு, உடல்வலி முதலிய தகுதிகளுக்கேற்ப நான்கு திணைக்களங்களாக வகுக்கப்பட்டனரென்றும் கூறிச்சென்றனர்.

ஒரே தரத்தினராகிய மக்கள் இவ்விதம் நாற்குலத்தினராக — நான்கு திணைக்களங்களுட் சேர்ந்தோராக — வகுக்கப்பட்டமை தேசநலன் கருதியும், மக்கள் முட்டின்றி வாழ்வது கருதியுமன்றி, உயர்வு தாழ்வு நோக்கியல்லவெனத் துணிந்து கூறலாம். தொழில் காரணமாகத் தோன்றிய குலங்கள் பிறப்புரிமையைக் காரணமாகக் கொண்டமை கவலத்தக்கது. நாளடைவில் உயர்வு தாழ்வு உணர்ச்சிகள் தோன்றி வளர்ச்சி அடைந்தன. அந்தணரிற் பலர் தங்குல ஒழுக்கம் குன்றிய பின்னரும், அந்தணராம் பதவியில் நின்றும் இறங்காது பிறப்புரிமைக்கே முதன்மை அளித்தனர். ஏனைய குலத்தினர் கல்வி, கேள்வி, ஒழுக்கங்களில் அந்தணர் பலரினும் மேம்பாடெய்தியும் முதன்முதல் ஆரியரால் அமைக்கப்பட்ட வகுப்பில் நின்றும் ஏற்றம்பெற முடியாராயினர். அந்தணர்க்கு உரிய செந்தண்மை பூண்டொழுகல் என்னும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலக்கணம் எஞ்ஞான்றும் பிறப்பினால் அமையா தென்க. வெட்டைநோய் உடையார்க்கு வெட்டை நோய்ப் புதல்வர் நிச்சயமாகப் பிறத்தல்போன்று கல்வியும், ஒழுக்கமும் உடையார்க்குக் கல்வியும் ஒழுக்கமும் உடைய புதல்வர் பிறக்கின்றிலர். மக்களுட் சிலர் பிறப்புரிமை இன்றிச் சால்பு காரணமாக உயர்ந்தோர் ஆயினமைக்குச் சான்றுகள் உளவெனினும் அவை மிகமிகச் சிலவே. சாதிப் பாகுபாடு பரதகண்டமெங்கணும் விசேடமாகத் தமிழுலகெங்கணும் பூதவுருவெடுத்தது. இதன் கொடுமையை அறிஞர் பெருமக்கள் பலர் அவ்வப்போது மக்களுக்கு இடித்துரைத்தனர். பாரதியாரும்,

"சாதிகளில்லையடி பாப்பா — குலத்
தாழ்ச்சி இகழ்ச்சி சொல்லல் பாவம்"

என்று உணர்ச்சியோடும் உருக்கத்தோடும் பாடிச் சென்றார்.

இது குறித்து இந்தியக் குடியரசின் ஜனாதிபதி, தத்துவ ஞானி, சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் கூறுபவற்றை இங்குத் தருவாம்.

"யாவரும் சூத்திரராகப் பிறக்கின்றனர். அவரவர் ஒழுக்கநிலையாலும் ஆத்மீக சத்தியாலும் புனருத்தாரணம் (Regeneration) எய்திப் பிராமணர் ஆகின்றனர் என மனுநூலார் கூறுகின்றனர். மனி



தர் ஒவ்வொருவரும் தத்தம் குணசீலத்துக்குத் தக்கதாக அந்தணனாக அல்லது சத்திரிய, வைசிய, சூத்திரனாக ஆகின்றனர். துர்ச்செய்கையினால் ஒரு பிராமணன் தனது நிலையில் நின்றும் இழிகின்றான். பிராமணனுடைய நிலைமையில் வாழ்க்கை நடாத்தும் க்ஷத்திரியனும், வைசியனும் பிராமணர் ஆகின்றனர். * நால்வகைப் பகுப்புக் கொள்கை சனநாயகக் (Democratic) கொள்கையாகும். ஆத்மீக நிலையளவில் எல்லா மனிதரும் சமமானவர்கள். மனித சிருட்டியில் தனது சொந்த முறையில் வளர்ச்சிபெறக்கூடிய ஆன்மா ஒன்றுண்டு. பொருளாதார முறையில் தொழில்கள் எல்லாம் சமூக வாழ்க்கைக்குத் தேவையானவை; ஏற்றத்தாழ்வில்லாதவை; முக்கியமானவை. எவனுக்கு எத்துறையில் ஆற்றலுண்டோ அவனுக்கு அத்துறையில் வளர்ச்சியடையச் சமூகம் இடந்தரல் வேண்டும்; தடைசெய்தல்கூடாது."

"இந்தியர் ஒழுங்கின்படி ஒருவன் எவ்வளவு உயர்ந்த வகுப்பில் வைக்கப்படுகின்றானோ அவ்வளவு சுயநலம் அற்ற கடினமான சீவியஞ்செய்ய வேண்டியவனாகிறான். இன்ப நுகர்வை இலக்காக வைத்துச் செயல்புரிதல் அந்தணர்க்கு விலக்கப்பட்டது.

* மகாபாரதம் அனுசரண பர்வம் 143 — 6.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆதித் (Aboriginal) தெய்வங்களுக்குப் பூசனை செய்த பிராமணர் அல்லாதாரும் பிராமணர் ஆயினர். ஆட்சி செய்த குடும்பத்தினர் (சத்திரியர் அல்லாதாரும்) சத்திரியர் வகுப்பில் சேர்ந்து கொண்டனர்.''

''* வேதகாலத்தில் அந்தஸ்துகள் இருந்தன வெனினும் சாதி வேறுபாடு இருந்திலது. சாதகக் கதையொன்றின்படி ஓர் உழவன் மகளைப் புத்தபெருமான் மணந்தனர். புராணகாலத்திலே சாதி வேறுபாடு 'மோசமான' நிலை எய்தியது. ஒருவனுடைய குணசீலமே அவனை அந்தணன் ஆக்குகின்றது. சாதிவேற்றுமை ஏற்பட்ட பின்னும் அடிமைப்பெண்ணின் மகன் 'கவச' என்பவன் பிராமணனாக ஏற்றுக்கொள்ளப்பட்டான். பல வீடுகளில் வசித்த 'ஜபாலா' என்னும் பெண்ணின் மகனுக்குக் கௌதம கரிதுறுமாத (Gautama Haridurumata) எனும் முனிவர் ஞானோபதேசஞ் செய்து அவனை அந்தணனுக்கியமை குணசீலத்தி லேயே குலம் தங்கினமைக்கு எடுத்துக்காட்டாகும். பொய்யுரைத்தல் சுத்தமற்ற உணவு உண்பதினும் இழிந்த செயலென ஒரு முனிவர் கூறுகின்றனர். சாதி வேறுபாடு தற்போது நிலைநாட்டப்படும் உருவத்தில் பிரிவினையையும் கோளாற்றையும் (Mischief) உண்டாக்குகின்றது. இராமானுஜர்,

* வேதகாலம் கி. மு. 1500 — 600.



இராமானந்தர், கபீர், நானக், சைதன்யர், நாமதேவ், எக்நாத் முதலிய பல்வேறு சமயகுரவர்கள் சாதிக்கோட்பாட்டின் உயர்வு தாழ்வுக்கொள்கையை எதிர்க்கின்றனர். ஒருவன் தன் இயற்கையான வல்லபத்தை விருத்திசெய்யாது பாரம்பரியத் (Hereditary) தொழில்களைச் செய்யவேண்டுமென்று எங்காவது கூறப்படவில்லை.''

இந்தியப் பிரதமராய் இருந்த பண்டிதர் ஜவகர்லால் நேரு கூறுவது:

நீண்டகாலச் சீர்திருத்தமுற்ற திராவிடரை ஆரியர் அடிப்படுத்தினர். இவர்தாம் திராவிடரிலும் மிக மேலானவரென எண்ணினர் என்பதற்கு ஐயமின்று. திருத்தமற்ற சில ஆதிக்குடிகளும் இருந்தனர். இம் மூவகுப்பார்களுக்கும் உண்டான மோதுதலினாலும், பரஸ்பரத் தொடர்புகளினாலும் சாதிக்கொள்கை படிப்படியாய் வளர்ந்தது. தொடக்கத்தில் இக்கொள்கை சமூகத்தில் ஓர் ஒழுங்கை நிலைநாட்ட ஏற்பட்டதெனினும் நாளடைவில் இழிவைக் (Degradation) கொணர்ந்தது. மக்கட்குச் சாபமும் ஆயிற்று. ஆரிய எனுஞ் சொல் உழுதல் எனப் பொருள்படும் ஓரடியில இருந்து பிறந்தது. சாதிப்பாகுபாடு ஏற்படுவதன் முன்னர் எல்லா மக்களும் உழவர்களாய் இருந்தனர். இவருள் நினைவாற்றல் நிரம்பியவர்களும் தேசத்தை ஆற்றுப்படுத்த வல்லவர்களும் பிரித்

Eastern Religious and Western Thought Pages:- 355-378

www.tamilarangam.net



தெடுக்கப்பட்டு அந்தணர் வகுப்பினராக்கப்பட்டனர். மேலும் அவருள் சத்திரியர், வைசியர், கமத்தொழிலோர், நுண்கலை வல்லோர், வர்த்தகர் எனப் பல வகுப்பினர் எழுந்தனர். படையெடுத்த பல்வேறு சாதியினர் தம்மைச் சத்திரியர் ஆக்கிக்கொண்டனர் எனினும் இந்தியாவின் நீண்டகாலச் சரித்திரத்தில் பேரறிஞர்கள் தோன்றிச் சாதிமடைமை விளைக்கும் தீங்கினைக் களங்கமற எடுத்துரைத்திருக்கின்றனர். சாதிக் கொள்கை தற்காலத்திற்கு முற்றும் ஒவ்வாதது. இந்துக்களும், இந்தியாவும் வாழவேண்டுமானல் அது நம்மைவிட்டு மலையேறிவிடவேண்டும்'' என மகாத்மா காந்தியடிகள் கூறுகிருர்.*

தமிழர் பெரும்பாலுந் தென்பாரதத்திலும், ஈழ நாட்டிலும், மலாயா, பர்மா தேயங்களிலும், பிஜித்தீவுகளிலும் வசிக்கின்றனர். ஈழ நாட்டின் வடகீழ் மாகாணங்களில் வசிப்போர் இலங்கைத் தமிழரெனவும் மலைப் பிரதேசங்களில் வசிப்போரிற் பெரும்பான்மையோர் இந்தியத் தமிழரெனவும் சொல்லப்படுகின்றனர். தென்னிந்தியத் தமிழர் மிக முன்னேற்றம் பெற்றுவிட்டனர். திராவிட முன்னேற்றக்கழகம் சாதி ஒழிப்புச் சம்பந்தமாகச் செய்து வரும் தொண்டு பாராட்டற் பாலதாகும். பாரததேசத் தலைவர்களின் முயற்சிக

* Discovery of India — Pages 85, 86 & 130.



ளாலும், மக்கள் தலைவர்களுக்கு வணக்கஞ் செய்தலும், அவர்கள் ஆலோசனைகளைக் கேட்டு நடத்தலும் நன்றென உணர்ந்தமையாலும், தம்மைப் போலப் பிறரை நேசித்த கிறிஸ்துவ மிசனரிமார், குறைவுற்று நசிக்கப்பட்டவர்களுக்குக் கல்வித்தாபனங்களை ஏற்படுத்தி அவர்களை உயர்த்தி வைத்தமையாலும் இன்று எல்லா மக்களுள்ளும் மாபெருந் தலைவர்கள் தோன்றியுள்ளனர். தாழ்ச்சி உயர்ச்சி சொன்னவர்களின் கோட்டை உடைந்து தகர்ந்து விட்டது. நீதிநெறியில் நின்று பிறர்க்கு உதவும் நேர்மையர் மேலவராயினர்.

ஈழத்து மலைநாட்டில் வசிக்கும் தமிழர்கட்குள் சாதிவேறுபாடு செயல் முறையில் அதிகமாகக் காணப்படுவதில்லை எனலாம். பத்தி பரவசப்பட்ட தமிழ்ச் சகோதரர்கள், யாவரும் எல்லா ஆலயங்களிலும் சென்று யாதொரு வேறுபாடும் இன்றி வழிபாடு செய்கின்றனர். நாவிதர்களும் ஈரங் கோலிகளும் ஒருவித கோளாறுமின்றி யாவர்க்குஞ் சேவை செய்கின்றனர். துர்வசத்தால் தீண்டாதார் எனப் பெயர் பெற்றவர்களுட் பலர், கல்வியொளியைத் தடையின்றிப் பெற்றுச் சிறந்த பொதுநலச் சேவை செய்தனர்; இன்றும் செய்கின்றனர். பாராளுமன்ற அங்கத்தினராயுமிருந்தனர். சிலர் நியாயத்துரந்தரர்களாகவும், எண்ணற்ற பலர், அரசாங்க சேவையிலும் தோட்டங்களிலும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களாகத் திறமையுடன் கடமையாற்றுகின்றனர். கலியாண வைபவங்களுக்கும் ஏனைய வைபவங்களுக்கும் அழைப்பு அனுப்பப்படும்போது சாதி வேறுபாடு நோக்கப்படாது அந்தஸ்தும் தொடர்பும் கவனிக்கப்படுகின்றன.

"எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே
— பொய்யும்
ஏமாற்றும் தொலேகின்ற காலம் வந்ததே.

" நிகரென்று கொட்டுமுரசே
இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்
தகரென்று கொட்டுமுரசே
பொய்மைச் சாதி வகுப்பினை யெல்லாம் "

என்னும் பாரதி பாடல்கள் தோட்டச் சிறுவர் வாயினின்றும் வானளாவத் தொனிக்கின்றன.

தீண்டாதார் எனக் கூறப்படுபவர் தொகை ஏனையவரோடு ஒப்புநோக்குமிடத்துக் கணிசமான அளவு ஏற்றமடைந்துள்ளது. அது காலச்சுருக்கத்தில் அவர் மேனிலே அடைந்தமைக்குச் சாதகமான ஏதுக்களில் ஒன்ருனமை குறித்து மகிழத்தக்கது.

ஈழத்துக் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருக்கோணமலே என்னும் மாவட்டங்களில் வசிக்குந் தமிழர்க்கு விவாகத் தொடர்புகளிலன்றி ஏனைய விடயங்களிற் பெரும்பாலும்



சாதி வேறுபாடு தோன்றுவதில்லே. ஏறக்குறைய எல்லா மக்களும் தமது அடிப்படை உரிமைக்குப் பங்கமின்றி வாழ்கின்றனர். இங்கு சாதி வேறுபாட்டால், சண்டை, சச்சரவு, கொலே, கோளாறு முதலியன தோன்றுதல் அரிதெனலாம்.

இனி, ஈழநாட்டிலே, வடமாகாணத்தில் விசேடமாக யாழ்ப்பாணக் குடாநாட்டிற் சாதி வேறுபாடு எந்நிலேயிலுள்ளதென்பதை எடுத்துக் கூறுதல் அவசியமாகின்றது. உலகில் தமிழர் வாழுந் தேசங்கள் எல்லாவற்றிலும் பார்க்க இவ்விடத்திலேயே சாதி வேறுபாடு மிக மோசமான நிலேயிலுள்ளதென்பதை விசனத்தோடு குறிப்பிடுகின்ருேம்.

யாழ்ப்பாணத்தில் நீதிமன்றங்களுக்கு வரும் வழக்குகளிற் பலவற்றுக்கும் சாதிக்கோளாறே பெரும்பாலுங் காரணமாய் இருக்கின்றது. ஆலயங்கள் யாவருக்கும் இன்னும் திறந்துவிடப்படவில்லை. போசன சாலேகளிலும், தேநீர்க் கடைகளிலும் வேறுபாடு உண்டு. நாவிதர்களும், ஈரங்கோலிகளும் சிறுபான்மையோரென அறியப்படும் மக்களுக்குச் சேவைசெய்ய மறுக்கின்றனர். மக்களின் சுயமரியாதைக்குப் பங்கமாகத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பலர் நாவிலும் பயில்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈழநாட்டிலே சிங்களவர் பெரும்பான்மையின ராகவும், தமிழர் சிறுபான்மையினராகவும் வாழ்கின்றனர். தமிழர், பெரும்பான்மையினரான சிங்களவரால் ஒடுக்கப்படுஞ் சந்தர்ப்பங்களில் மிக ஆத்திரம் அடைகின்றனர். யாழ்ப்பாணக் குடா நாட்டில் மக்களிற் சிலர் சிறுபான்மையினராகக் கணிக்கப்படுகின்றனர். இவர் இக்குடாநாட்டின் பெரும்பான்மையினரால் ஒடுக்கப்படுஞ் சந்தர்ப்பங்களில் ஆத்திரம் அடைதல் இயல்பன்றோ!

கல்வி, செல்வம் இவற்றால் ஏற்பட்ட ஏற்றத் தாழ்ச்சியினாலும், உத்தியோகப் பதவியினாலும் வேறு காரணங்களினாலும் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் மணமக்களிடையே கலப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. இத்தகைய சங்கரர்களும் அவரின் சந்ததியினருமே தாழ்ச்சி உயர்ச்சி சொல்லுவதில் மிக மோசமானவர்களாயிருக்கின்றனர்.

'அ' என்பவர், 'ஆ' என்பவரை இழிந்தோரெனக்கூற, 'ஆ' என்பவர், 'அ' என்பவரை இழிந்தோரெனக் கூறுகின்றனர்.

'இ' என்பவர் இல்லத்தில் 'ஈ' என்பவர் நீரும் பருகார். அவ்வாறே, 'ஈ' என்பவர் இல்லத்தில், 'இ' என்பவர் நீர் பருகார்.

எனினும் சகோதரத்துவம், அன்பு, நேர்மை முதலிய சால்புகள் பொருந்திய உயர்ந்தோர்பலர்



ஈழநாட்டின் வடபகுதியில் இருக்கின்றனரென்பது மகிழ்ச்சிக்குரிய விடயமே.

பெரும்பாலும் உயர்ந்தோரென மதிக்கப்படுவோரிடையே சாதிவேறுபாடு மிகக்குறைந்துவரும் இக்காலத்தில் தாழ்ந்தோரென மதிக்கப்படுவோரிடையே இவ்வேறுபாடு குறைவதாகக்காணவில்லை. இதற்குக் காரணம் அறிவு ஆராய்ச்சிகளின்குறைவு எனலாம்.

ஈழத்தமிழராகிய எமது தற்கால அரசியல் நிலைமைக்கு நாம் சிறுபான்மை மக்களுக்குப் புரிந்த கொடுமை எமக்குச் சாபமாயிற்றோ என எண்ண இடமுண்டு. ஆபிரகாம் லிங்கன் என்னும் விடுதலை வீரர் ஒருமுறை பின்வருமாறு எழுதினார். 'Those who deny freedom to others deserve it not for themselves, and under a just God cannot long retain it"

"சுயாதீனத்தை ஏனையோருக்கு மறுப்பவர் தாம் சுயாதீனமாக வாழ்வதற்குத் தகுதியற்றவர். நீதியுள்ள கடவுள் ஆணையால், அவர்கள் நீண்ட காலமாகச் சுயாதீனத்தை அனுபவித்தல் இயலாது" என்பது இதன் பொருள்.

அல்பேட் சுவைற்சர் என்னும் தத்துவஞானி "நாகரிகம் என்றாலென்ன?" என்ற கேள்விக்குப் பதில் கூறும் பொழுது பின்வருவமாறு குறிப்பிடுகின்றார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



" Only through reverence for life can we build a civilization which will be true and lasting "
இதன் பொருள்: உண்மையும் நீடித்து நிற்கக் கூடியதுமான நாகரிகத்தை ஏனைய உயிர்களுக்கு மரியாதை காட்டுவதாலேயே நாம் நிலைநாட்டக் கூடும்.

" சிறியாரை மேம்படச் செய்தால் — பின்பு
தெய்வம் எல்லாரையும் வாழ்த்தும் "
என்றார் பாரதியாரும்.

வேதாந்தம் பேசிக்கொண்டு சாதிமடைமையைப் போற்றும் வீணர்கூட்டத்துக்கு அறிஞர் ஒருவர் பின் வருமாறு கூறுகின்றனர்.

" He who sees one spirit in all and all in the one spirit henceforth can look with contempt on no creation "
எல்லாவற்றிலும் இறைவனைக் காண்பவனும் இறைவனில் யாவையுங் காண்பவனும் எந்தச் சிருட்டியையும் நிந்திக்கமுடியாது என்பது இதன் பொருள்.

பேராசிரியர் ஆனல்ட்ரோயின்பீ கூறுவது :

பேராசிரியர்ரோயின்பீ (Prof. Arnold Toynbee) இணையற்றமையின் கபடநாடகம் (Pretention to uniqueness) என்னும்கட்டுரையிற் கூறியிருக்கும் கருத்துக்களை ஈண்டு எடுத்துக் கூறுவாம். "யூதர்கள் தம்மையே இறைவனாற் றெரிந்தெடுக்கப்பட்டோரெனக் கருதுவதும், கிறீத்தவர்கள், தமது சமயமே ஒப்பற்ற தனிச் சமயமெனக் கருதுவதும் கபட நாடகமாகும். பிரித்தானிய சாகிப்புக்களும், இந்தியப் பிராமணர்களும், யப்பானியரும், ஜெர்மனிய நாஸிஷ்களும் தங்களையே தாங்கள் ஒப்பற்றவராகத் தெரிந்துகொண்டனர். ஏனையோர் இதனை ஒப்புக்கொள்ளுமாறில்லை. உரோம் இராச்சியத்தைக் கைப்பற்றிய மிலேச்சர்களான 'ரியூத்தோனிய பாஷை' (Teutonic speaking barbarians) பேசுபவரின் (ஜெர்மனியர், ஸ்காந்திநேவியர், ஆங்கிலேயர் முதலியோர்) சந்ததியினரும், இந்துநதிப் பிரதேசத்தைக் கைப்பற்றிய சமஸ்கிருத பாஷை பேசுபவர்களின் சந்ததியினரும் பெரிது சிறிது பாராட்டுவதில் மிகமோசமானவர்களாவர். இந்தியாவிலும் மேலைத்தேசங்களிலும் இவ்வேறுபாடு தவறென்பதை உணர்ந்து துக்கமும் வெட்கமும் அடையும் மாந்தர் பலர் உளரென்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.''



சமூக நலனுக்கு அவசியந் தேவையான தொழில் செய்பவர்களுள் ஒரு தொழில் செய்வோர் இன்னொரு தொழில் செய்பவரிலும் மேலானவரென நினைக்கின்றனர். தாவரபோசனம் உண்போர் மாமிசபோசனம் உண்பவரிலும் மேலானவர்களென எண்ணுகின்றனர். உயர்ந்த நிலங்களில் வசித்தவர் ஒருபோது தாழ் நிலங்களில் வசித்த மக்களைக் குறைவுற்றவரெனக் கருதினர். குடாநாட்டில் வசிப்போர் தீவுப்பகுதிகளில் வாழ்

www.tamilarangam.net



பவரிலும் தாம் உயர்ந்தோர் என்றனர். வெண்ணிற மேனியர் கருமை நிறமுடைய மக்களிலும் தாமுயர்ந்தோரென்கின்றனர். அணுக்குண்டை உடையோர் தாம் ஏனையோரிலும் பெரியவர் எனக் கருதுகின்றனர். சீனர் தம்மை வானவர் என்றும் ஏனையோரிலும் உயர்ந்தவரென்றும் நினைக்கின்றனர். இவையெல்லாம் ஒரு மாருட்டமென்க.

பொருளாதார முறையில் எல்லாத் தொழில்களும் சமூக வாழ்க்கைக்குத் தேவையானவை. ஏற்றத்தாழ்வில்லாதவை என முன்னமே கூறினேம். சாதாரணவாழ்க்கையில் நடைபெறும் சம்பவமொன்றை எடுத்துக்காட்டி இவ்வுண்மையைப் புலப்படுத்துவாம்.

வாடிவீடொன்றில் விருந்துபசாரம் நடைபெற்றது. அவ்வீட்டின் நாற்புறங்களும் குப்பை கூளங்களின்றி நன்கு சுத்திகரிக்கப்பட்டிருந்தன. சமயலறை விசாலமானதும், உணவின் தூய்மையைக் கெடுக்கும் ஈ முதலிய செந்துக்களற்றதாயுமிருந்தது. பணிபுரிந்தோர் வியர்வை நாற்றம் அற்றவர்களாகவும், உடலிற் சட்டை அணிந்தவர்களாகவும், தலையில் உரோமம் சிந்தாதவாறு தொப்பி அணிந்தவர்களாகவும் இருந்தனர். எனவே அங்கு சமைக்கப்பட்ட உணவு தூய்மையானதென்பது வெளிப்படை. பெரும்பாலும், பௌத்தர்களும், இந்துக்களுமாக நூற்றுக்கு மேற்பட்ட பிரமுகர்கள் அவ் வைபவத்திற் பங்குபற்றினர். பிரமுகர்களின் சிரசுகள் சிகையலங்காரச் சிறப்பை விளக்கின. அவர்கள் அணிந்திருந்த, 'பளீர்' என்ற உடைகள் ஈரங்கோலியரின் உழைப்பை இயம்பின. வர்ணந் தீட்டிய ஆசனங்கள் நுட்பத் தொழிலாளர் சேவையைச் செப்பின. உணவைப் பரிமாறியவர்கள் சுத்தமான வெள்ளுடைகளைத் தரித்திருந்தனர். நீரின்வந்த, 'அறுக்குளா'ப் பொரியலும், நிலத்தின் வந்த கோதுமை அப்பமும், பண்ணைகள் தந்த கோழிக் கறியும் உண்டவர் நாவிற்கு உவப்பை அளித்தன. இவ்வைபவம் பல்வேறு தொழிலாளிகளதும் சேவையினுற் சிறப்பாக நடைபெற்றதென்பதை யார்தாம் மறுக்கமுடியும். இத்தொழில்களுள் ஒன்று பெரியது; மற்றது சிறியதென்று பகுத்தறிவுள்ளோர் கூறுரன்றே!

நீராற் புறந் தூய்மைசெய்து, வெண்டுகில் அணிந்து வாசனைத் திரவியங்களால் உடலை அலங்கரித்து, வீடுவாசல்களைச் சுத்திகரித்து மஞ்சள் நீர் தெளித்து, வீடுவாசல்கள்போல விரேசன கூடங்களைச் சுத்தமாகவைத்து, வெண்கலப் பாத்திரங்களைத் துலக்கிச் சுத்தமாகச் சமைத்த உணவைக் கை கால் கழுவிக் கடவுள் வழிபாடுசெய்து





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உண்டு வாழ்தல் தமிழர் எனப்படுவார் யாவரும் அநுசரிக்கவேண்டிய ஆசாரங்களாகும்.

ஆயின், பொய்ம்மை, பொலியான் தற்செருக்கெண்ணம், தீயுரை, அநீதி, பிறர்வாழ்ப்பொறுது அவர்க்குத் தீங்கிழைத்தல், தாக்குற்றபோழ்திற் தமரேபோல் நன்குரைத்துப் போக்குற்றபோழ்திற் புறங்கூறல், பொதுநலன் போற்றாது, சுய நலம் போற்றுதல் ஆதிய அழுக்குடையராயிருந்து ஆசார புருடராய் விளங்குபவர் வெள்ளையடிக்கப் பட்ட கல்லறைக்கு ஒப்பாவர். இன்றைய விஞ்ஞான, தத்துவஞான உலகில் அகத்தூய்மையற்ற ஆசாரத்துக்குப் பூசனைசெய்வார் கல்லாதாரே.

எனினும் தப்பெண்ணங்கள் இலேசிற் கழிய மாட்டாவென்பது உண்மையே. கிராமங்க டோறும் சாதிவரையறை சொல்லும் கிழவரும், கிழவியரும் மலிந்திருக்கின்றனர். அறிவுபடைத் தோரெனத் தம்மைப் பாராட்டிக்கொள்ளுங் கற்றவர் குழாம் இவர்களின் ஆதிக்கத்துக்குட் பட்டவராகின்றனர். ஆதலால் நம் தமிழ்ச் சமூகத்தில், "நீதி, உயர்ந்த மதி, கல்வி, அன்பு நிறைய உடையவர்கள்" தோற்றுதல் வேண்டும். தமிழர் எங்கிருப்பினும், யாவரேயாயினும் ஓர் அன்னையின் புதல்வரென்னும் உண்மைக் கருத்து இடம்பெறல்வேண்டும்.



"ஒன்றும் கடவுள் உலகிடைத் தோன்றிய
மானிடர் எல்லாம் சோதரர் — மானிடர்
சமத்துவ முடையர் சுதந்திரம் சார்ந்தவர்"

என்னும் பாரதியின் செய்யுளை நாவினலன்றிச் செய்கையினலும் போற்றத்தக்க மக்கள் தோன்றுதல் வேண்டும்.

சாதிவேறுபாட்டின்படி எந்த ஒருமனிதனும் தாழ்ந்தோனுமாகின்றான்; உயர்ந்தோனுமாகின்றான். இக்கொள்கையை நீக்கி ஒருவன் தனக்கு உயர்ந்தோனுமில்லை; தாழ்ந்தோனுமில்லை என்ற காந்தீயக் கொள்கையைக் கடைப்பிடித்தல் நன்றாகுமன்றோ!

மனித உரிமைத் தினத்தை ஒட்டி அமெரிக்க ஜனதிபதி 'ஜோன்சன்' நாட்டுமக்களுக்கு விடுத்த வேண்டுகோளின்படி, திசம்பர் மாதத்தில் ஒருவாரத்தினை மனித உரிமைகள் வாரமாகக் கொண்டாடும்படியும், அமெரிக்கர் யாவரும் தங்கள் சுதந்திரத்தையும், மற்றவர்களது உரிமைகளையும் பாதுகாப்பதில் தீவிரமாக இருக்கும்படியும் கேட்டுக்கொண்டுள்ளாரென ஒருபத்திரிகைச் செய்தி வெளியாகியுள்ளது. ஈழநாட்டிலும் சாதி ஒழிப்புத் திட்டமொன்று தாபிக்கப்பட்டிருப்பது களிப்புக்குரியது. இருள்போக்குந் தினமாகிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தீபாவளிப் பண்டிகையைச் சாதி ஒழிப்பு நாளாகக் கொண்டாடுதல் நன்மை பயக்குமென நம்புகிறோம்.

"இழிவுகொண்ட மனிதரென்பது" எங்கள் தமிழ்நாட்டில் இல்லாதொழியக் கற்றுணர்ந்தோர் யாவரும் முயற்சி செய்வோமாக.

"சிறியாரை மேம்படச் செய்தால் — பின்பு
தெய்வ மெல் லாரையும்வாழ்த்தும்"

"அன்பென்று கொட்டுமுரசே — மக்கள்
அத்தனைபேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும் — இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்"

சாதிக்கொள்கையை அடிவருடிக்கொண்டு தமிழ் இனத்தையும், தமிழ்மொழியையும், இந்து சமயத்தையும் கீழ்நிலையடையச்செய்தல் வேண்டுமா? அன்றி, சாதி வேறுபாட்டைத் தீவிரமாக ஒழித்துக்கட்டி, இனம், மொழி, மதம் இவற்றை நிலைபெறச்செய்தல் நன்றா? இரண்டில் ஒன்றைத்தான் நாம் எதிர்பார்க்கலாம். இரண்டும் ஒருபோதுங் கைகூடாதென்னும் உண்மையை உணர்க.

இவ்விடத்து, முசல்மான்கள் பேச்சிலன்றி நடைமுறையிலுந் தமக்குள் வாழ்ந்துகாட்டுஞ்



சகோதரத்துவத்தையும் இதனால் அவர்கள் உலக சரித்திரத்தில் ஈட்டிய வெற்றியையும், காந்தீய சேவா சங்கத்தினரும், திராவிடமுன்னேற்றக் கழகத்தினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியினரும் சாதிஒழிப்புச் சம்பந்தமாகச் செய்யும் முயற்சிகளையும் பாராட்டாமலிருக்க முடியாது.

தமிழர்வசிக்குந் தேசங்களிலெல்லாம் விசேடமாக ஈழநாட்டில் அவர்க்கு ஏற்பட்டிருக்கும் பொதுவான எதிர்ப்பகைகளை அரசியல் அரங்கிற் காண்கின்றோம். இப்பகைகளை எதிர்த்து வெல்வதற்கும் தமிழினத்தைக் காப்பதற்கும் வேண்டுவது இன ஒற்றுமையே.

இனி, ஈழநாட்டிலே, தீண்டாமை ஒழிப்புத் திட்டத்துக்கு எதிர்ப்புக்கூறுவார் நியாயங்களை ஆராய்தல் நன்று. இவர், "சாதி ஒழிப்பை விரும்புபவர் தங்கள் பிள்ளைகளைத் தீண்டாதார்க்கு விவாகஞ்செய்து கொடுக்கட்டும். தீண்டாமை ஒழிப்புப்பற்றி நாம் பின்னர் ஆலோசிப்போம்" என்கின்றனர். இது குளறுபடியான நியாயமாகும். தற்போது தமிழ்ச் சமூகம் இருக்கின்ற நிலையில் ஒரு பெண்ணோ, அன்றி ஒரு ஆணோ கலப்பு விவாகத்தினால் தனது குலத்தினின்றும் ஒதுக்கப்பட்டுப் பெற்றோரையும், சகோதரரையும், இனத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தோரையும் பிரிந்து தனிமையில் உழன்று வாழ்தல் புரிதபிக்கக்கூடிய நிலையாகும்.

கலப்புவிவாகப் பேச்சைத் தற்போது ஒதுக்கி வைப்பதனுல் தமிழினத்தின் ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படப்போவதில்லை. நீக்கிரோ மக்களின் உரிமைப் போராட்டத்தில் கலப்பு விவாகம் ஓர் அம்சமாகப் பேசப்படவில்லை. ஆதலால் தீண்டாமை ஒழிப்புத் திட்டத்தில் மேற்குறித்த கேள்விக்கு இடமின்ருகின்றது.

இரண்டாவதாகத் தீண்டாமையை ஒழித்துவிட்டால் தற்போது தீண்டாதார் எனக் கூறப்படுந் தமிழ் மக்களாற் செய்யப்படும் மரமேறுதல் முதலிய தொழில்களுக்கு வேலையாள்கள் இல்லாமற் போகக்கூடுமென்ற பீதி நிலவுகின்றது. பண்டுதொட்டு மரமேறுந் தொழிலைச் சொந்தமாகக்கொண்ட தென்னிந்தியத் தமிழ்மக்களிற் கணிசமான தொகையினர் கிறீத்தவப் பாதிரிமாரின் தொண்டினுல் இரண்டு மூன்று தலைமுறைகளாகக் கல்விகற்றுப் பாரதநாட்டின் பல பாகங்களிலும், ஈழநாட்டிலும் மேனிலை அடைந்தபோதும், மரமேறுவதற்கு இவ்வினத்தோருட் சிறிதும் தட்டுப்பாடில்லை எனலாம். ஆதலால் இந்த நியாயத்துக்கும் இடமில்லை எனலாம்.

இதுவரை, குலம் — நான்கென ஆரியர் வகுத்தனரெனவும், ஆதியில் இவ் வகுப்புக்கள் நன்



னேக்கத்துடன் அமைக்கப்பட்டனவெனவும், பின்னர்ப் பிறப்புரிமை பெற்றமையால் அர்த்தமற்றவையாய்ப் போயினவெனவும், தமிழர்கள் இச் சாதிவகுப்புள் அகப்பட்டுப் பொலிவிழந்து உழலுகின்ருரெனவும், சாதிவேறுபாடு நீங்கிய பின்னரே தமிழ் இனம் தலைநிமிர்ந்து நிற்கமுடியுமெனவுங் கூறினேம். இந் நான்கு வகுப்புள் ஒருவராகிய வணிகர் வரலாற்றைப் பிரித்துக்கூறுமுன் பொதுவாகத் தமிழ்ப்பெருமக்களின் வரலாறு கூறுதல் அவசியமாகின்றது.

## 2. தமிழர் நாகரிகம்

தமிழர் நாகரிகம் மிகமிகத் தொன்மைவாய்ந்தது. உலக சரித்திரத்திலே தமிழரே முதன்முதல் நாகரிக வாழ்க்கை எய்தியசாதியினராவர். இவர்கள் கடல்மேற்சென்று பலப்பல நாடுகளிலுந் தமது நாகரிகத்தைப் பரப்பினர். இதனைச் சரித்திரவரலாறு அன்றித் தொல்பொருளாராய்ச்சிச் சான்றுகளும் வலியுறுத்தும். தமிழர் ஆதியில் நெய்தனிலப் பெருமக்களே. தமிழர் கைக்கொண்ட சமயம் புத்த, சமணக் கொள்கைகள் தோன்றுதற்கு முற்பட்டதும், ஆரியர் ஆதிக்கத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துள் உட்படாததுமான இந்துசமயமே. * இறைவன் ஒருவனே என்பது இவரது பழந் தமிழ்க் கொள்கை எனினும் முருகக் கடவுளையும் அம்மையையும் வணங்கினர். அவர், தம்முணவில் மீனைச் சேர்த்துக்கொண்டனர். தங்கொடியில் மீனைப் பொறித்தனர். போதாக்குறைக்கு மீனை இறக்குமதி செய்தனர். மீனைப்போன்று பாலும், நெய்யும், வெண்ணெயும் மிருக போசனங்களெனினும், இருதயநோயை வருவிக்கத்தக்க, 'கொலஸ்ரறல்' (Cholesteral) என்னும் கொழுப்புச் சத்தானது பால், நெய் முதலியவற்றில் உண்டென்றும் அதனைத் தவிர்க்கத்தக்க சத்து மீன் நெய்யில் உண்டென்றும் இன்று வைத்திய ஆராய்ச்சியாளர் கண்டிருக்கின்றனர்.

தமிழர் வாணிகத்துறையில் மிக உன்னதநிலை அடைந்திருந்தனர். அங்ஙனம் வாணிகத் துறையில் ஈடுபட்டிருந்த நெய்தல்நிலப் பெருங்குடிகள் பரதர் எனப்பட்டனர். இவர்கள், திரமிலர், மீனவர் எனவும் அழைக்கப்பட்டனர்.

இத்துறையிலன்றிக் கணிதநூல், வானநூல் முதலிய நுண்துறைகளிலும் வல்லுநராய் விளங்கினர். இனச்சார்பினுற் கூட்டியும் குறைத்தும் திரிபுபடக் கூறுவார் போலல்லாது நடுவுநிலைநின்று

* 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பது தமிழ்மூவாயிரம்.



மேலே காட்டிய உண்மைகளை உலகுக்கு எடுத்துரைத்த பேராசிரியர்களின் கருத்துக்களை ஈண்டுக் கூறுவாம்.

டாக்டர் ஆர். எஸ். ஸ்பிற்றில் கூறுவது:

டாக்டர் ஆர். எஸ். ஸ்பிற்றில் என்பார், தென்னிந்தியத் திராவிடர் ஆகிய தமிழர் ஆதியில் மத்தியதரைக் கடற்கரையில் நெய்தல்நில மக்களாகவே வாழ்ந்தனரென்றும், அங்கிருந்து எகிப்து, ஈரான் முதலிய இடங்களைக் கடந்து பாரசீகக்குடாக் கடல்வழியே இந்து நதிப்படுக்கைக்கு வந்தனரென்றும் ஆராய்ச்சியாளர்கண்ட முடிபுகளை எடுத்துரைத்தனர். ஆதியில் தமிழர் யாவரும் நெய்தல்நில மக்களாகவே வாழ்ந்தனரென்பதும் நெய்தல் நிலத்தோர்க்குரிய தொழில்களையே புரிந்தனரென்பதும் வலியுறுத்தப்பெறுகின்றன.

வண. சுவாமி ஞானப்பிரகாசர் கூறுவது:

தமிழருள் ஆராய்ச்சித்துறையில் முதன்மை வகித்த வண. சுவாமி ஞானப்பிரகாசர், இதிகாசத்தின் தந்தையான 'ஹெரோடோத்துஸ்' என்பவருடைய நூலிற்கண்ட கருத்துக்களைப் பின்வருமாறு எடுத்துக் கூறுகின்றனர்.

"எகிப்து, பபிலோனியா முதலான தேசங்களில் விஸ்தாரப் பிரயாணம்செய்து அவ்வவ்விடத்

4

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துப் பழங்கால ஐதிகங்களை எழுதிவைத்தவரான இவர் கிரேக்கதேசத்திலுள்ள லீசியா என்னும் பிரிவின் பண்டைக் குடிகளைப்பற்றிச் சொல்லுமிடத்து லீசியர் முன்னுளிலே 'தெர்மிலே' (அல்லது எக்காற்றேஸ் என்பவர் எழுதுகின்றபடி திரமிலே) என்ற பேருடையோராய் இருந்தனரெனவும், தங்காலத்தில் அன்னோர் தங்களை, லீசியர் என்று சொல்லிக்கொண்ட போதிலும் பிறர் அவர்களை தெர்மிலே என்றே அழைத்து வந்தனரென்றும் கூறுகின்றனர். இன்றும், அவர் கூற்றுப்படி, இத்தெர்மிலே அல்லது திரமிலே முன் கிறேத்தா என்னும் தீவில் வசித்தவர்கள். அத்தீவில் இருந்தோரெல்லாம் இவர்களைப் போன்ற *மிலேச்சர்களே. அங்கு மீனோஸ், சர்பெடோன் என்னும் இருவர் சகோதரர்களுக்கிடையில் அரசுரிமையைப்பற்றிப் போர் மூண்ட போது, மீனோஸ், சர்பெடோனை வென்றதினுல் இச்சர்பெடோனும் இவனைச் சார்ந்து போராடிய திரமிலரும் அந்நாளில் மீலியஸ் என்று சொல்லப்பட்ட நாட்டில் வந்து குடியேறினர். மீலியஸ் நாடே பின் லீசியாவாயிற்று. திரமிலரே லீசியராயினர்.''

* மிலேச்சர் என்பது புத்தியற்றவர் என்ற கருத்தல்ல. தமிழ் இலக்கியங்களில் வேற்றுநாட்டவர்களை மிலேச்சர்களென வழங்கினர்.



சுவாமி விபுலாநந்த அடிகளார் கூறுவது:

'' மற்று நெய்தல்நிலப் பெருங்குடிகள் பண்டைய வரலாற்றினை நுனித்தறிதற்குப் பேராதாரமாய் விளங்குவன இந்துநதிப்படுக்கையிலுள்ள மொஹெஞ்சதாரோ நகரத்தின் புதைபொருள்களை அகழ்ந்துகண்ட ஆராய்ச்சி முடிபுகளே '' அவ்வாராய்ச்சி முடிபுகளைக் குறிப்பிடுமுன் அந்நுட்பங்களையெல்லாம் திறம்பட வாராய்ந்து பத்திரிகை வாயிலாகவும், நூல்கள் மூலமாகவும் வெளியிட்ட, வண. எச். ஹிருஸ் சுவாமி அவர்களைப்பற்றி, அருட்டிரு விபுலாநந்த அடிகள் கூறுவனவற்றை இங்குத் தருவாம்.

'' கத்தோலிக்க கிறீத்தவ சமயகுரவரும், பம்பாய் நகரப் பல்கலைக்கழகத்துச் சரித்திர ஆராய்ச்சித்துறைத் தலைவரும் ஆகிய வண. எச். ஹிருஸ் சுவாமியார் ( Rev. Fr. H. Heras ) பழந் தமிழரது வரலாற்றினைப் பெருக ஆராய்ந்து நூல்கள் வாயிலாகவும் பத்திரிகை வாயிலாகவும் வெளியிட்டிருக்கின்றுர். ஆரிய நாகரிக முதன்மையை எவ்வாற்றானும் நிலைநாட்ட வேண்டுமென்னும் விருப்புடைய ஒரு சாரார் இவர்க்கு இன்னல்விளைக்க முனைந்துநிற்பது இவரது கல்விநிறைவையும், நடுவுநிலைமையையும் தெளிவுறக் காட்டுகின்றது. இவர் ஸ்பெயின் தேசத்திற் பிறந்தவர். துற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வொழுக்கம் உடையவர். ஆதலினாலே ஆரியர் பக்கமோ, திராவிடர் பக்கமோ சாராது நடுநின்று உண்மைகூறும் ஆற்றல் வாய்ந்தவர்.''

மேலும் விபுலாநந்த அடிகள் ஹிரஸ் சுவாமியார் கண்டறிந்து வெளியிட்ட கருத்துக்களை ஒரு கட்டுரை மூலமாக வெளியிட்டிருக்கின்றார். அவற்றுட் சில பின்வருமாறு:

''மொஹெஞ்சதாரோ விளக்கமுற்றிருந்த காலத்தில் சிந்துநாடு (இந்தியா) ஆனது. மீனாடு, பறவைநாடு, மரங்கொத்திநாடு, ஏழ்நாடு என்னும் நாற்பெரும் பிரிவினதாகவிருந்தது. சிந்து நதியின் வலப்புறத்தில் இருந்த மீனாட்டிலே வாழ்ந்தோரது கொடியிலே இணைமீன்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இந்நாட்டுத் தலைநகராகிய நண்டூர் என்பதே இப்பொழுது நிலத்தை அகழ்ந்து காணப்பட்ட மொஹெஞ்சதாரோ (இறந்தோர் தரை) என்னும் இடமாகும். உடையூர், ஊரிலூர், எய்கையூர், மூனூர் (வடமொழியாளர் கூறும் திரிபுரம்) என்னும் நகர்களும் மீனாட்டில் இருந்தன. மரங்கொத்திநாடு பனி படர்ந்த மலைநாட்டில் இருந்தது. இங்கு வாழ்ந்தோர் சிவலிங்கத்தையும் மூவிலை வேலையும் வழிபட்ட வேலாளிர் ஆவர். (பிற்காலத்திலே வேளிர் எனவும், வேளாளர் எனவும் வழங்கப்பட்டோர்



இவரென எண்ண இடமுண்டு.) பழைய சுமேரியர் திராவிட குலத்தாரென்பது சுமேரிய உருவங்களைக் கூர்ந்து நோக்குவாருக்கு இனிது புலப்படும். திராவிட மொழிகளை இக்காலத்திலும் வழங்கும் தென்னிந்தியரின உருவத் தோற்றமே பழைய சுமேரியரின் உருவத்தோற்றம். பழைய சுமேரியர் இந்தியாவிலிருந்து கரை வழியாகவும் பாரசீகக் கடல் வழியாகவும் சுமேரு நாட்டிற் குடியேறினார்களென்று எண்ண இடமுண்டு. இவர்கள் குடியேறிய புதிய நாட்டிற்குக் கொண்டு வந்த நாகரிகம் சிந்துநதிக் கரையிலே வளர்ச்சியெய்தியிருக்கலாம். சித்திரங்களை எழுத்தாக வழங்கிய முறையினின்று செப்ப மெய்திய இவர்களது எழுத்துமுறை பின்னாளிலே பாபிலோனியத்திலே சதுரமுனை எழுத்தாணிகளாலே பசுமண்வட்டிகைகளிலே எழுதப்பட்டுக் கியூனிபோம் (Cuneiform) என்னும் ஆப்பு வடிவ எழுத்துக்களாக உருத்திரிந்தது. இவர்கள் சிந்துநதிக் கரையிலிருந்து சுமேரு நாட்டிற்கு வரும் வழியிலே ஏலம் (Elam) என்னும் நாட்டிலே தமது நாகரிகத்தைப் பரப்பினார்கள். சிந்துநதிக் கரையிலிருந்த மீனாட்டு நண்டூராகிய மொஹெஞ்சதாரோவின் வரலாற்றையும் பழைய சுமேரிய வரலாற்றையும், 'குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள, வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு தென்றிசை ஆண்ட தென்னவன் வாழி' என்னும் சிலப்பதிகாரக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூற்றையும் நாம் படிக்கும்போது தலைச் சங்கத் திறுதிக் கடற்கோளின் பின் பாண்டியனது ஆட்சியிலிருந்த தமிழ்மக்களுள் ஒரு பகுதியார் கடலை கடந்து பாரசீகக் கடல் வழியாகச் சென்று, யூபிரூற்றஸ் — தைக்கிறிஸ் நதிக் கரையிலிருந்த நாட்டிற் குடியேறி அதற்குச் சுமேரியா என்னும் பெயரிட்டு வழங்கினார்களென்பதும், மற்றொரு பகுதியார். 'வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு சிந்துநதிக் கரையிலே தாங் குடியேறிய நாட்டிற்கு மீனாடு எனப் பெயரிட்டு இணைக்கயல் பொறித்த கொடியை உடையராய் வாழ்ந்தாரென்பதும் புலனாகின்றன. இங்கு உறைந்து சில காலத்தின்பின் கரைவழியாகவும் சுமேரியாவுக்குச் சென்றிருக்கலாம்.

சாலதேய நாட்டுச் சரிதம் (Story of Chaldea) முதலிய பல நூல்களை இயற்றிய றகொசின் (Ragozin) என்னும் பேரறிஞர் தாம் இயற்றிய வேதகாலத்து இந்தியா (Vedic India) என்னும் நூலிலே பின்வருமாறு கூறுகின்றார்:

"செமித்தியர் வருகையின்முன் பழைய பாபிலோனியத்தில் வாழ்ந்த சுமேரிய அக்கதியருக்கும் இந்தியாவின் வடமேற்குப் பாகங்களிலே வாழ்ந்த திராவிட மக்களுக்குமிடையேயுள்ள தொடர்பு சிறப்புவகையானது. இருசாராரும் ஒரே குலத்தினர். இக்குலத்தைத் துரானிய—குலமென்ன



லாம். அக்கதிய நாட்டுத் தெல்லோ நகரத்திலே கண்டெடுக்கப்பட்டதும், கி. மு. நாலாயிரம் என்னும் ஆண்டிற்குரியதுமான சிலைத்தலையானது தலைப்பாகையணிந்த திராவிட உருவத் தலையினது தோற்றமுடையது. சாலதேயப் பழையநகராகிய ஊரென்னுமிடத்திலே, கி. மு. மூவாயிரமாண்டுகளுக்கு முன்னிருந்த ஒரு மனையினுள்ளே தென்னிந்தியத் தேக்கமரத்துண்டொன்று கண்டெடுக்கப்பட்டது."

தென்னிந்தியாவுக்கும் சாலதேயத்திற்கும் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வணிகத் தொடர்பு இருந்ததென்பதற்கு இது சான்றாகும்.

பேராசிரியர். கோடன் சைல்ட் கூறுவது :

1946 ஆம் ஆண்டு தொடக்கம் இலண்டன் பல்கலைக் கழகத்தின் பழம்பொருள் ஆராய்ச்சித் துறையின் பேராசிரியராய் விளங்கிய, கோடன் சைல்ட் (Gordon Childe) என்பார் மொஹெஞ்சதாரோவின் சீர்திருத்த நிலையைப்பற்றிப் பின் வருமாறு கூறுகின்றனர்:

"பண்டசாலைகளையுடைய வீடுகள் இருந்தமை அவற்றுக்குச் சொந்தமானோர் வலிபடைத்த வணிகர்குலச் செல்வர் என்பதைக் காட்டுகின்றது. செங்கல்லாற் கட்டிய இரட்டை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாடிமேல் வீடுகளும் அவற்றுடன் சேர்த்துக் கட்டிய நீராடரங்குகளும் இருந்தன. இவற்றைவிட இரண்டு அறைகளுள்ள மண்வீடுகளும் தோன்றின. மேன்மாடிகளில் வணிகர் வசித்தமையாலும் மண் வீடுகளிற் சாதாரண தொழிலாளர் வாழ்ந்தமையாலும் மக்கள் அந்தஸ்து வேறுபாடு இருந்ததெனலாம். தற்போதும் சிந்துவிற் காணப்படும் கெட்டியான சில்லுகளுடைய வண்டிகளும் தோணிகளும் விளைபொருள்களை நகரங்களுக்கு ஏற்றிச்செல்ல உதவின. பதனிடாப் பொருள்கள் கைத்தொழில் செய்வதற்காக நீண்ட தூரங்களிலிருந்து கொண்டுவரப்பட்டன. இமாலயத்து மரங்களும் இராசபுத்தானத்துச் செம்பும் தென்னிந்தியாவின் சங்கும் வந்திறங்கின. இந்தியாவுக்கு வெளியாய தேசங்களிலிருந்து தகரமும், பொன்னும்' இரத்தினக்கற்களும் கொண்டுவரப்பட்டன. இவை அக்காலத்துச் சிந்துநதிப் படுக்கையில் வாணிகத்துறையெய்திய பெருமையினைக் காட்டுகின்றன. செய்யப்பட்ட கைத்தொழிற் பொருள்கள் சுமேரியா முதலிய வேறு தேசங்களுக்குச் சென்றன. பொன், வெள்ளி, இரத்தினக்கற்களாலமைந்த ஆச்சரியத்தை விளைக்கத்தக்க ஆபரணங்களும் ஆயுதங்களும் கண்டெடுக்கப்பட்டன. தெருக்களினதும், சாளரங்களினதும் அமைப்பு மிகச் சிறந்திருந்தமை நகரசங்க ஆட்சி நிறுவப்பட்டிருந்தமையினைக் காட்டுகின்றது.



போகப்பொருள்களும் பதனிடாப் பொருள்களுமன்றி மொஹெஞ்சதாரோ மக்கள் தமது உணவுக்காக அரேபியாக் கடற்கரைகளிலிருந்து மீனை ஒழுங்காக இறக்குமதி செய்தனர்.

இந்துநதிப் படுக்கையிலிருந்த மகத்தான நாகரிகம் உள்நாட்டு அழிவினாலும், மிலேச்சர்கள் படையெடுப்பினாலும் ஒழிவடைந்தது.

வண. சுவாமி ஹிறாஸ் கூறுவது :

வண. ஹிறாஸ் சுவாமியார் மதுரைக் கலாசாரச்சங்க (Madura Cultural League) மொன்றின் ஆதரவில் நடாத்தப்பட்ட கூட்டங்களிற் கூறிய கருத்துக்களை ஈண்டு யாம் தொகுத்துக்கூறுவாம்.

மொஹெஞ்சதாரோவில் திரையர் என்னும் ஒரு குலத்தினர் வாழ்ந்தனர். இவர் கீழ்ப்புறமாகச் சீனதேசம் வரையும் சென்றனர். மேற்புறஞ்சென்று சுமேரியாவை அடைந்தனர். மண் வீடுகளில் வசித்த சுமேரியருக்குச் செங்கற்களால் வீடுகட்டப் பயிற்றினர். ஹெறோடோற்றஸ் (Herodotus) என்னும் சரித்திர ஆசிரியர் மீனவர் பெருங் கப்பலோட்டிகள் என்கின்றார். இவர்க்கு, ஹெறோடோற்றஸ் தேர்மிலோய் என உபயோகித்த பதம் திரமிலரைக் குறிக்கின்றது. திரமிலர் என்பது திராவிடரைக் குறிக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மொஹெஞ்சதாரோ மக்களின் சமயக் கொள்கை இறைவன் ஒருவனே என்பது. இவர் இறைவனது நயனங்களை மீனினது கண்ணிற்கு ஒப்பிட்டனர். சூரியனை இறைவனோடு ஈடுபடுத்தினர். இறைவன் சூரியனில் அமர்ந்திருக்கிறானென்பதை இது ஒருபோது குறிக்கலாம். ஒரு கல்வெட்டின்படி, கடவுளரின் செயல் விளங்குகின்றது. மகாபலிபுரத்திலுள்ள சித்திரமொன்றில் இக்கருத்து விளங்குகின்றது. அதிற் சிவன், பார்வதி, முருகனாகிய மூவரும் ஒன்றாய் வீற்றிருக்கின்றனர். இன்னொரு கல்வெட்டில் முருகக் கடவுள் சிவபெருமானின் புதல்வனாகக் காட்டப்பட்டிருக்கின்றார். கல்வெட்டுக்களையும் முத்திரைகளையும் நுணுகி ஆராய்ந்த அளவில் மீனவர், பரவர், மரங்கொத்தியரென மூன்று பிரதான குலத்தவர் மொஹெஞ்சதாரோவில் வாழ்ந்தனர். ஒரு கல்வெட்டின்படி, அரசன் மீன்தீர்வை அறவிட்டனன். கோட்டைபோன்ற சுவர்களாற் சூழப்பெற்ற நகர்களில் மீனவர் வசித்தனர். இக் கோட்டைகள் அதிஷ்டக் குறியாகும் சுவஸ்திகா வடிவம் உடையன. மீனவர் ஏனைய இரு குலத்தினரிலும் சிறந்த சீர்திருத்தம் பெற்றவர். சுவஸ்திகா வடிவத்தை ஹிட்லர் ஆரியரின் வடிவமாகக் கொண்டனர். ஆனல் முதன்முதல் அது திராவிடர் கைக்கொண்ட சின்னமே. மீனவர் பின்னரும் பரவரும் கலந்துகொண்டனர். இக் கலப்பினாலேற்பட்ட சந்ததியினர் தேசமெங்கும் பரவினர்.

பாண்டியர் மீனவரின் சந்ததியினர் என இழுக்குறு மற் சொல்லலாம். மொஹெஞ்சதாரோவிற் றோன்றிய ஆரம்ப மக்கள் தங்களைத் திரமிலர் என அழைத்தனர். காலஞ் செல்ல இப்பெயர் திராவிடராயிற்று. கண்டெடுத்த வேறு கல்வெட்டுக்களின்படி மொஹெஞ்சோதாரியர் சிறந்த வான நூல் அறிவுடையர். சிந்து நதியின் வலப்புறத்திலே மீனாட்டிலே வாழ்ந்தோரது கொடியிலே இணை மீன்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இந் நாட்டுத் தலைநகராகிய நண்டுரென்பது மொஹெஞ்சதாரோ என்னும் இடமாகும்.

கி. மு. மூவாயிரத்து இருநூற்றைம்பதாம் ஆண்டுக்கும் ஈராயிரத்து எழுநூற்றைம்பதாம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், திராவிடர் இந்து வெளியில் மகத்தான நாகரிகத்தைத் தாபித்தனர். பின்னர்த் தென்திசை நோக்கி இலங்கை வரையுஞ் சென்றனரென இன்னொரு பேராசிரியர் கூறுகின்றனர். (A. C. Bouguet: Comparafive Religion)

இதுவரை எடுத்துரைத்த அறிஞர்களின் கருத்துப்படி, திரமிலர் எனவும், மீனவர் எனவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அழைக்கப்பட்ட தமிழ்ப்பெரு மக்களும் அவரைச் சார்ந்த தமிழரும் பண்டைக்காலத்தில் சிந்துநதி தீரத்திலும் கிரேக்க தேசத்திலுள்ள கிரேத்தா தீவிலும் வாழ்ந்தார்களென்று குறிப்பிட்டோம். தமிழர் ஆதியிற் றோன்றிய தேசம் கிரேக்க தேசமோ அன்றிச் சிந்துநதித் தீரமோ அன்றி வேறெத் தேசமோ என நிச்சயமாகக் கூற முடியாமை குறித்து வருந்துகின்றோம்.

வண. ஹிறாஸ் சுவாமிகளின் கருத்துப்படி, சிந்து நதித்தீரத்தில் இதுவரை கண்டெடுத்த புதை பொருள்களைக் கொண்டு அங்கு வாழ்ந்த மக்களின் நாகரிகத்தை இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதெனலாம். அகழ வேண்டிய நிலத்தில் மூன்றிலொரு பாகமே இதுவரை அகழப்பட்டிருக்கின்றது. இன்னும் அகழ்ந்தாற் சிந்துவெளி நாகரிகம் மிகமிகப்பழமையுடையதென்பதற்குரிய சான்றுகள் கிடைக்கலாம்.

கிரேத்தா தீவிலே வாழ்ந்த தமிழரைப்பற்றி எழுதிய கிரேக்க நூலாசிரியரான ஏரோடோத்துஸ் என்பவர் இருந்தகாலம் இற்றைக்கு இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதென அறிகின்றோம்.

எது எவ்வாறாகினும் வரலாற்று அறிஞர் கருத்துப்படி சிந்து நாகரிகம் தோன்றிய காலத்தில்



வேறெந்த மக்களும் அத்தகைய நாகரிகம் அடைந்திலர் என்பது பெற்றாம்.

இவ்வித நாகரிகம் எவ்வாறு அழிந்தொழிந்தது? மகத்தான நாகரிகம் உள்நாட்டு அழிவினாலும் மிலேச்சர் படையெடுப்பினாலும் ஒழிவுற்றதென 'கோடன் சைல்ட்' என்பார் கூறுகின்றனர்.

நகரங்களையும் கிராமங்களையும் அள்ளிப்போகத்தக்க வெள்ளப் பெருக்குக்குப் பேர்போனது இந்து நதி. மொஹெஞ்சதாரோவில் மணன்மேடுகள் படை மேற்படையாய் உயர்ந்திருக்கின்றன. அகழ்ந்துகண்ட வீடுகள் மாடிவீடுகளாயிருந்தமையால் அவை மணன் மேடுகளைத் தவிர்த்தற்குக் கட்டப்பட்டிருக்கலாம். ஆதலால் அங்கு வசித்த மக்கள் தட்பவெப்ப நிலைக்கேற்பத் தமது வாழ்க்கை நிலையை மாற்றியிருக்கலாம். ஆனால் இந்தக் காரணத்தால் திடீரென அழிவு ஏற்படாதன்றோ! அழிவு ஏற்படினும் ஒரு சிறு பகுதி அழியுமேயன்றி உண்டாய பேரழிவிற்கு வேறுகாரணம் வேண்டுமென வரலாற்று நிபுணர் கூறுகின்றனர்.

சிந்துநதிப்படுக்கை நாகரிகம் தோன்றி ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளின் பின் ஆரியர்படையெடுத்து இந்தியாவுட்புகுந்தனர். பின்னர், அராபியரும், ஈரானியரும், பார்த்தியரும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சைத்தியரும், துருக்கியரும் புகுந்தனர். தமிழருடன் பெருகக்கலந்து கொண்டவர்களும், அவர்களுடைய பழக்க வழக்கங்கள், கலாசாரங்கள், உணவு வகைகள், சமயவழிபாடுகள், மொழி, சாதிக்கொள்கை முதலிய யாவற்றிலும் மாற்றத்தையேற்படுத்தியவர்களும் ஆரியரே.

அலக்சாந்தர் கி. மு. முந்நூற்றிருபத்தைந்தாம் ஆண்டு சிந்துதேசத்தின் மீது படையெடுத்தனர். அராபியரின் படையெடுப்புக்கள், கி. பி. ஏழாம் நூற்றூண்டு தொடக்கமாக நடைபெற்றிருப்பதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. இப்படையெடுப்புக்களோடு இந்துசமயப் பெயருடைய மன்னர்களின் ஆட்சியும் சிந்துநதி தீரத்தில் நடந்திருக்கின்றது. ஏழாவது நூற்றூண்டின் நடுப்பகுதியில், கிருஷ்ணர், வல்லபர் என்னும் இருவர் சிந்துநாட்டில் ஆதிக்கம்பெற்றுச் சிவபெருமானுக்கோர் ஆலயம் அமைத்தனரென்று வரலாற்றுக் குறிப்பொன்றுண்டு. ஒருபோது சிந்துநாட்டு மன்னன் அராபிய வணிகர்களின் கப்பல்களுக்குப் பாதுகாப்பளிக்க மறுத்ததால் முகமது பின்குவாசிம் என்பான் இந்நாட்டைத் தாக்கினுன். இத்தாக்குதலில் திரமிலராகிய வணிகர் பலர் கொல்லப்பட்டிருக்கலாம். வண. சி. எப். அன்றூஸ் (Rev. C. F. Andrews) என்னும் பாதிரியார் சிந்து தீரத்து வணிகர் ஏழாம் தமது நாட்டைவிட்டு



ஈழநாட்டுக்கும், மலேயாவுக்கும் சென்று குடியேறினரென வெளியேறிய இந்தியர் என்னுங் கட்டுரையொன்றில் எழுதினர்.

பெரிய அலக்சாந்தரின் பிரதான கப்பலோட்டியாகிய ஒனேசிக் கிறிற்றஸ் என்பார் இந்துநதிக் கழிமுகக்கப்பலோட்டிகள் இலங்கைசென்று வாணிகம் செய்தார்களென்றும் அத்தேசத்தின் வளங்களைப்பற்றித் தனக்கு அறிவித்தார்களென்றும் எழுதினர்.

கி. பி. முதலாம் நூற்றூண்டிலிருந்து கிழக்கிலும் மேற்கிலும் இக்கப்பலோட்டிகள் சென்றனர். பர்மா, மலாயா, யாவா, சுமத்திரா, சீயம், கம்போடியா, இந்து சீன முதலிய தேசங்களுடனும் விசேடமாக இலங்கைத் தீவுடனும் கப்பற்போக்குவரத்து நடாத்தியுள்ளனர். இவ்வுண்மையைக் கிரேக்கரினதும், அராபியரினதும் இதிகாச நூல்கள் எடுத்துக் காட்டுவதாக அறிகிறோம். இக்காலத்தே இந்தியாவிற் கப்பல் கட்டுந் தொழிலும் பிரபலமாக இருந்தது.

அசோக மன்னர் காலந்தொட்டுச் சமய சம்பந்தமாகவும், அரசுரிமை சம்பந்தமாகவும் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே கப்பற்போக்குவரவு அமோகமாக நடைபெற்றது. ஆரும் நூற்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



றாண்டு தொடக்கம் மாந்தை ஒரு சிறந்த துறைமுகமாயிற்று. இத்துடன் திருக்கோணமலையும் ஊர்காவற்றுறையும் சிலபோது சலாபமும் துறைமுகங்களாக உபயோகிக்கப்பட்டன. ஏழாம் நூற்றாண்டில் மேற்குக் கடல்களில் அராபியரும் கீழ்க் கடல்களில் சீனரும் ஆதிக்கமடைந்தனர். ஒன்பதாம் நூற்றாண்டிற் கடற்கொள்ளை ஒரு சாதாரணமான சம்பவமாயிற்று. எனினும் பத்தாம் நூற்றாண்டினிறுதியில் சோழமன்னர் சிறந்த கடற்படையுடையோராயினர். இலங்கையையும் மாலைதீவையும் இவர் கைப்பற்றி ஆண்டனர். ஒன்பதாம் நூற்றாண்டிறுதியில் அராபியர் கொழும்புத் துறைமுகத்தில் தமது வர்த்தகத்தை நிலைநாட்டினர்.

கிறிஸ்துவுக்குப்பின் ஆயிரத் தெண்பத்தெட்டாம் ஆண்டெனக் குறிக்கப்பட்ட கல்வெட்டொன்றில் ஆயிரத்தைஞ்ஞூறு தமிழ் வணிகர் கொண்ட கூட்டுத்தாபனமொன்று குறிக்கப்பட்டிருக்கின்றமை அறியக்கிடக்கின்றது. அதில் அவர் தம்மைக் கிருதயுகந் தொடக்கமாக ஆறு கண்டங்களிலும் தரைமார்க்கமாகவுங் கடல்மார்க்கமாகவுஞ் செல்லுந் துணிபுடையவரெனவும், யானை, குதிரை, இரத்தினக் கற்கள், வாசனைத் திரவியங்கள், மருந்துவகைகள் முதலியவற்றைப் பெற்று வாணிபஞ் செய்பவர்களெனவும் பொறித்திருக்கின்றனர். ஆனால் பதினாலாம் நூற்றாண்டிற்



கீழ்க்கடலில் தமிழர் ஆதிக்கம் ஒழிய அராபிய வணிகர் ஆதிக்கம் பெருக்கம் அடைந்தது.

உலக சரித்திரத்தை நோக்கும் வழி ஓர் இனத்தவரின் வீழ்ச்சிக்குப் பிரதானமான காரணம் அவர் தம்முள் ஒற்றுமை அற்றிருந்தமையே என்பது புலனாகும். தமிழரின் போக்கை நடைமுறையிற் கண்டவர்கள் இக்குறைவு பெருமளவில் தமிழருக்குள் இருந்திருக்கலாமென்று ஊகிப்பரெனலாம்.

"கொஞ்சமோ பிரிவினைகள் ஒரு கோடி என்றால் அது பெரிதாமோ" என்னும் பாரதியின் வாக்குத் தமிழரையே குறிக்கின்றது. மிலேச்சர்களின் படையெடுப்புக்களில் தமிழர் தோல்வியுற்றமைக்கு அவர்தம்முள் ஒற்றுமை குன்றியிருந்தமை ஒரு காரணமாக இருக்கலாமெனக் கூறுதலிற் கெடுதலில்லை. வியக்கத்தக்க நாகரிகம் பெற்றிருந்த தமிழர் இன்று தமக்கென ஓர் அரசின்றித் தவிக்கின்றனரன்றோ !

இதுவரை சிந்துநதித் தீரத்து நாகரிகத்தின் அழிவுக்கு ஏதுக்கள் எவையாயிருக்கலாமென ஆராய்ந்தோம். இனிச் சிந்துவெளிப் பெருமக்களாய வணிகர் வரலாறு கூறுவாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 3. வணிகர் வரலாறு

முன்னர், திமிலரர் மீலியஸ்நாட்டிற் குடியேறின ரென்றும் மீலியஸ்நாடு லீசியா வாயிற் றென்றும் திரெமிலரே லீசியராயின ரென்றுங் கூறினேம். இவர்களைப்பற்றி வண. ஞானப்பிரகாச சுவாமிகள் மேலும் பின்வருமாறு கூறுகின்றனர்.

"இவர்களுடைய பழக்கவழக்கங்களுளொன்று, வேறு எந்தச் சாதிகளுள்ளும் காணப்படாதது; அது யாதெனில், இவர்கள் தங்கள் வழிமுறையைத் தந்தையில் நின்றன்று தாயில் நின்று எடுத்துச் சொல்லுகின்றவர்கள். ஒருவனிடம் அவன் குலவழியைக் கேட்பின் அவன், தகப்பனின் வம்சாவழியை அல்ல; தாய்வம்சாவழியையே எடுத்துக் கூறுவான். ஒரு குலமகள் அடிமை மகனை விவாகஞ் செய்து கொள்ளின் இருவர்க்கும் பிறந்த பிள்ளை மேற்குலத்ததாக எண்ணப்படும். அடிமை குலமகனை மணந்தாலோ சந்ததி அடிமையாக மதிக்கப்படும்"

"ஏரோடோத்தொஸ் சொல்லிய குணங் குறிகளுள்ள அக்காலத்து மக்கள் தமிழரே. இச்சாதியாருள் இன்றைக்கும் பெண் தலையிடம் பெற்றிருத்தலைக் காணலாம். பிளினி என்னும் உரோம நூலாசிரியர் பாண்டியர்களுள் (Pandai) மட்டும் பெண்கள் அரசாளும் வழக்கம் இருந்ததெனக்கூறி



யதும் இங்கு நோக்கத்தக்கது. இன்றைக்கும் மலையாளத்தில் பெண்களுக்கே ஆண்களிலும் கூடிய உரிமைகள் உள. அரசனின் உடன் பிறந்தாள் அரசி என்னும் பட்டத்துக்கு உரியளாவள். அரசன் மகன் அல்ல; அவள் மகனும் மகளுமே இளைய இராசா இளைய இராணி என்னும் நாம காரணத்துக்கு இலக்கானவர்கள். அதன் ஒரு பாகத்தில் மாமன் பெயரைத் தந்தை பெயராகக் கொள்ளும் மருமக் கட்டாயம் வழங்கியமையால் அது நாரிசேரம் எனப் பெயரடைந்தமையும் நோக்குக. தாயம் என்ற சொல்லும் தாய் ஆட்சியைக் காட்டுவது போலும். யாழ்ப்பாணத்தில் முக்காற் பங்கு நிலம் பெண்களுடையது. பெண்ணரசு தமிழகத்தில் விழங்கிய காலங்களும் உள. பெற்றோரைக் குறிக்குமிடத்து, தந்தைதாய் என்றன்றித் தாய்தந்தை; அன்னையும் பிதாவும் எனக் கூறும் வழக்கத்தையும் காண்க. கடவுளை ஆதித் தமிழர் பெண்ணுருவாகச் சொல்லியதும் ஒன்று.

"ஆகவே, 'ஏரோடொத்துஸ்' உடைய, திரமிலே பெண்வழியைப் போற்றிய வழக்கம் இக்காலத் தமிழருடையதை ஒத்திருக்கக் காணலாம். கிறேத்தா தீவைத் திரெமிலருடைய வாசத்தானமாகப் பழைய சரித்திர ஆசிரியர்கள் காட்டியதற்கிணங்க, அத்தீவின் பழையபேரும், தரிமிலி என்றிருந்ததையும், 'லீசியர்' தங்கள் பிரேதக் குழிக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கல் வெட்டுக்களில் தங்களுக்குத் 'தரமிலே' என்று பேர்பொறித்து வந்ததையும் நோக்குக. அத்தீவின் பழைய நாகரிகமும் தமிழ்நாகரிகமும் ஒன்று என்பது இற்றைக்கு நன்றாய் நிலைநாட்டப்பட்ட ஒரு உண்மை. அதற்கு இலிங்க ஆராதனம், தாய்த் தெய்வ வழிபாடு; ஏறுதழுவல், பிணங்களைத் தாழியிலிட்டுப் புதைத்தல் ஆதிய பல மறுக்கொணா ஒப்புமைச் சாட்சிகள் உள.

'' ஏரோடொத்துஸ் '', கண்ட இடங்களில், திரெமிலே (அல்லது திரமேலிர்) எனப்பட்ட தமிழர் பரதகண்டத்திலேயும் முற்காலத்தில் திரமிளர் என அழைக்கப்பட்டமையை இனிநோக்குவோம். தமிழ் நூலாசிரியர்களுள் முதன் முதல் இதற்குச் சாட்சியானவர் இற்றைக்கு முந்நூறு வருஷங்களின்முன், 'பிரயோக விவேகம்' என்னும் நூலை இயற்றிய சுப்பிரமணிய தீட்சிதராவர். இவர், 'த்ரமிள' எனும் வடமொழிப் பேர்தான் தமிழெனச் சிதைந்து வந்ததெனச் செப்பினர். இப்பெயர் வடமொழி நூல்களுள், திரவிடம், திராவிடம் எனச்சிறிது திரித்து வழங்கப்பட்டதை மனுஸ்மிருதியிலும், பிற்பட்ட வடமொழிப் புராணங்களிலும் காண்கின்றோம். சில இடங்களில் தென்னாட்டார் அனைவரையும் பொதுவாய்க் குறித்த இப்பெயரீடு தமிழருக்கே சிறப்பாய்ப் பொருந்துவது என்றதைக் கி.பி.ஏழு அல்லது, எட்டாம் நூற்



றாண்டைச் சேர்ந்த 'குமாரிலபட்டர்' 'ஆந்திரத்ராவிடபாஷா' என்று வகுத்துக் கூறியதனால் விளங்க வைத்தார். ஆந்திரம் என்பது தெலுங்கு; கன்னடத்தை இவர் தெலுங்கோடு சேர்த்தார் போலும். அக்காலம் மலையாளம் தமிழிலிருந்து முற்றாகப் பிரிபடாது நின்றமையால் அது தமிழுள் அடங்கும். உள்ளபடி தமிழர், கன்னடர், தெலுங்கர், மலையாளர் எல்லாம் ஆதித்திரமிளருள் அடங்கியவர்களே. பிற்காலம் மட்டும் தமிழர் எனச் சிறப்பித்துக் கூறப்பட்ட தென்னாட்டாருக்குத் 'திரமிளர்' எனும்பேர் வேறு கூறப்பட்டது. இவர்களுடைய மொழிதான் 'திரமிளம்' எனச் சிறப்புப்பேர் அடைந்தது. தமிழ், வடநாட்டாரால் திராவிடம் என வழங்கப்பட்டதற்குக் குமாரிலபட்டர் கூற்று ஒரு நற்சான்று.

'திரெமிலே' (திரமேலிர்) எனும்பேர் தென்னாட்டில் தமிழரென மருவி வழங்க வடமொழி நாடகங்களிலும் சமணர் நூல்களிலும் அது தவிட தபிள என மாறுவதாயிற்று. ஆயினும் கி. பி. ஆறாம் நூற்றாண்டிலேதான் வராக மிசிரரின் நூலின் பழங் கையெழுத்துப் பிரதிகளில் 'த்ரமிட' எனும் உருவம் காணப்பட்டது. அந்நூற்றாண்டிலேயே, மங்கலேச அரசன் சாசனங்களில் 'திரமில' என வருகின்றது. தென்னிந்தியத் தமிழரை அறிந்த கிரேக்க ஆசிரியர்கள், தங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கள் நூல்களில் தமிழர் என்ற பிற்கால உருவத்தைத்தான் 'தமேராய்' ஆதிய வெவ்வேறு வகையாய்த் திரித்து எழுதினர்.

''இவ்வாருயின் 'தெர்மிலே' அல்லது திரெமிலே என்னுஞ் சொல்லின் பொருள் யாது? பழஞ் சொல் ஆராய்ச்சி முடிபுகளின்படி, 'தெர்மிலே' என்பது, 'திரமிலே' என்னும் உருவத்தின் ஒலிவடிவம். 'திரெமிலே' என்பது 'திரமேலிர்' என்னும் பழந்தமிழின் கிரேக்க வடிவம். திர என்பது திரை என்னும் சொல்லின் பழைய வடிவம். கடல் என்பது அதன் பொருள் திரைமேலிர் என்பதில்-இர் என்பது வேளிர், மகளிர் என்பவற்றின்போல உயர்திணைப் பன்மையை உணர்த்தும் பழைய கடைநிலை. இர் இன்றைக்குப் பெரும்பாலும்—அர் என நிற்கின்றது. ஆகவே திரமேலிரை இன்றைய வழக்கின்படி திரைமேலர் எனல் வேண்டும். திரைமேலரையே கிரேக்கர் 'திரெமிலே' என்றும் 'தெர்மிலே' என்றும் திரித்துச் சொல்வோராயினரென்க. கடல்மேற் செல்வோர் கடலோடு சம்பந்தம் பூண்டோர் என்பது தான் திரைமேலர் என்பதன் கருத்து. பிரயாணம் பயணம் என வந்தது போல, திரமேலர், தமிலர் தமிழர் என வந்தது. தமிழர் பேசிய மொழி தமிழ் என்ருயிற்று.



'தமிழர் ஆதியிலே கடல்மேல் வலிபடைத்தோராய் இருந்தனர் என்றமை பல ஏதுக்களாலும் பெறப்படும். இதனுலேதான் போலும் அவர்களுள் பிற்காலத்திலும் பரவர், திரையர், திமிலர், மீனவர் எனும் முக்கிய பிரிவார் இருக்கக் காண்கிறோம். பரவர்—பரவையின்மீது செல்லுவோர். இவர்கள் சிந்து வெளியில் மிக்கிருந்ததை அவ்விடத்துக் கண்டெடுத்த சித்திர லிபிச் சாசனங்கள் காட்டும் என்ப. திரையர் என்னும் சொல் திரமிலர் என்பதைப்போல, திர என்னும் அடியாய்ப் பிறந்து, நெய்தல் நிலத்தவரைக் குறிப்பது. திமில் என்பது திரைமேற் செல்வது; கட்டுமரம் மீன்படகு. இது கடற்ருெழிலாளரையே குறிக்கும், திமில் என்ற சொல்லிற்கு திரைமேல் என்பதே சப்த உற்பத்தியாயின், தமிழரும் திமிலரும் எனும் இருசொல்லும் ஒரே அடியாற் பிறந்தமை நோக்கி மகிழத்தக்கது. பாண்டியன் மீன்கொடியுயர்த்தியதும் அவன் மீனவர் தலைவன் என்றமையினுற் போலும். கிறேத்தா தீவின் மீனெஸ் என்னும் தலைவனையும் இங்கு நினைக்கத்தகும். அவன் பெயர் மீனன்போலும். அத்தீவில் கடலோடு சம்பந்தம் பூண்டிருந்த சாதியார் திரமிலர் என்று வழங்கப்பட்டமை மிகப் பொருத்தமுள்ளதேயாகின்றது. தமிழர் பண்டு தொட்டுக் கடற்செலவிற் சிறந்தவர்களென்பதற்கு அன்னுருடைய மொழியில் கடல்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பரவை, புணரி, ஆர்கலி, முந்நீர் எனச் சமுத்தி ரத்தையும், கலம், தோணி, மிதவை என மரக் கலத்தையும் குறிக்கும் பழந்தமிழ்ச் சொற்கள் பல இருத்தலும் சான்று.

இனி, மகாவித்துவான் பிரமஸ்ரீ சி. கணே சையர் அவர்கள் தமது கட்டுரையொன்றிற் பின் வருமாறு கூறுகின்றார். 'திமிலர்' எனப்படுந் தமிழ் நிலத்தாரே ஆதியிற் கடல் வழியாகப் பிற நாடு சென்று வாணிகஞ் செய்தாரென்று சரித் திர ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றமை நெய் தல் நிலத்து வசிக்கும் திமிலரையே குறிக்கு மாதலின் நெய்தல் நிலத்து வாழுந் திமிலர் வாணிக நிமித்தம் தமது மரக்கலங்கள் வழி யாகக் கடல் கடந்து பிறநாடு செல்ல அவர் மனை வியர் தனித்திருந்து இரங்கலானும், அவ்விரங் கல் நெய்தற்குரித்தாதல் காண்க. தமது மரக் கலங்கள் வாயிலாகக் கடலிற் சென்று பழகிய திமிலர்க்கே முதலிற் கடல்வழியாகப் பிறநாடு சென்று வாணிகஞ் செய்தல் இயலுமென்க''

குறுந்தொகை ஆராய்ச்சியுள், நெய்தற் றிணையை ஆராய்ந்த, வித்துவான் இராஜ. சிவ. சாம்பசர்மா அவர்கள், நெய்தல் நிலத்துக் கருப் பொருள்கள் கூறும்வழி, சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுழைச்சி, திமிலர் முதலியோரை உயர்ந் தோரெனக் குறிப்பிட்டார்.



மட்டக்களப்பிலுள்ள புளியந்தீவில், புலியன் என்னுந் திமிலர் குலத்தரசன் அரசாண்டான் என்றும் பின்னுள், புலியன் தீவு என்பது புளியந் தீவென வந்ததென்றுஞ் சுவாமி விபுலானந்த அடி கள் ஈழகேசரியில் எழுதினர். பண்டைக்காலத்தே கடல் கடந்து வேற்றிடஞ் சென்று அரசு வீற்றி ருந்மைக்குச் சுலபமாயிருந்தது அவனும் அவனைச் சார்ந்தோரும்கப்பலோட்டுதலில் வல்லமை பெற்ற றைற் போலும்.

திருக்கோணமலைப்பிரிவில் வெருகல் சித்திர வேலாயுத சுவாமி கோயிற் பட்டோலை வாசிக் கப்படும் பொழுது 'சிந்துநாட்டார் வருக' என, திமிலர் குலத்தவரைக் குறிப்பிடலும், யாழ்ப் பாணக்குடாநாட்டில் ஆதித் திராவிட மக்கள் இவர்களைக் கண்டபோது, 'சிந்துநாடு வருக' என முகமன் கூறி உபசரித்தமையும், அராலி வடக் கில் வதியும் இவ் வழியினரின் பழைய ஊஞ்சற் பாட்டில், அவர்கள் தம்மைச் சிந்துநாட்டாரெ னப் புகழ்ந்து பாடியிருத்தலும் பொருள் பொதிந்த செயல்களாகும். இலக்கியப் பூஞ் சோலை எனும் சஞ்சிகையில் இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர்கலா நிதி க. கணபதிப்பிள்ளை என்பார், திருக்கோண



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மலைப்பிரிவிலுள்ள திமிலர் குலத்தினரைச் சிந்து நாட்டாரெனக் குறிப்பிட்டு ஒரு கட்டுரை எழுதியுள்ளார். ஈண்டு, சிந்துநாடு என்பது சிந்துநதிப் படுக்கையேயாகும். முன்னரே இந்நூலிற் காட்டிய, வண. அன்றூஸ் பாதிரியாரினதும், 'ஓனேசிக் கிறீஸ்ரர்' என்னும் கப்பலோட்டியினதும் கூற்றுக்களை இவ்விடத்து ஒப்பு நோக்குக.

இதுகாறும் கூறியவற்றாற் பேரறிவும், ஆராய்ச்சிப்பேராற்றலும், பகுத்தறிவுமுடையோர், போற்றற்குரிய நடுவு நிலைமையும், உடைய பண்டைய இதிகாச நூலாசிரியர்களின் கருத்துப்படி, சிந்துநதிப் படுக்கையில் உன்னத நாகரிகமும், உன்னத அந்தஸ்தும் பெற்றுச்சிறப்புடன் வாழ்ந்த திரமிலரின் கலப்பற்ற வம்சாவழியினர் திமிலர் குலத்தினரென்பது தெளிவுறப் பெற்றும்.

ஒரு குலத்தினரின் தற்காலப் பொருளாதார நிலைமையைக் கொண்டு அவர்கடம் சரித்திர வாயிலாக நிலைநாட்டப்பட்ட பண்டைக்கால நாகரிகத்தை எத்துணைத்தானும் மறுத்தல் இயலாதென்பதை ஈண்டுக் கூறுதல் அவசியமாகின்றது. எடுத்துக்காட்டாக, மொஹெஞ்சதாரோ, மெம்பிஸ் (எகிப்து) முதலிய இடங்களில் நாகரிகம் கி. மு. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுவரை



விளங்கிற்று. பாபிலோனிய அசீரிய நாகரிகம் கி. மு. ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டது. பாரசீக நாகரிகம், கி. மு. ஐந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டது. இத்தேயங்கள் நாகரிகநிலையில் மிக முன்னேற்றமடைந்திருந்த காலத்தில், தற்போது வியக்கத்தக்க முன்னேற்றமடைந்த தேசத்தினரின் பெயரே உலகில் தெரியப்பட்டிலது. இவருடைய தற்போதைய நிலையைக் கொண்டு பண்டு நாகரிகமடைந்த மக்களின் பெருமை அளவிடக்கரிதன்றோ !

இனி, வணிகர் குலத்திமிலரின் இருக்கைகளை நோக்குவோம். இதுவரை கிடைத்த புதைபொருள் ஆராய்ச்சியின்படி இவர்களின் முன்னோர் சிந்துநதிப்படுக்கையில் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தனரென்பது வெளிப்படை. பெரும்பாணாற்றுப்படையில் உரையாசிரியர் நச்சினார்க்கினியர், 'இது திமிலர் முதலியோர் இருப்புக் கூறியவாறாயிற்று' எனக் காட்டும் பகுதிகளை எடுத்துக் கொள்வோம்.

"........................ பாற்கேழ்

வாலுளைப் புரவியொடு வடவளந் தரூஉ
நாவாய் சூழ்ந்த நளி நீர்ப் படப்பை
மாட மோங்கிய மணன்மலி மறுகிற்
பரதர் மலிந்த பல்வேறு தெருவிற்

SEELAN BOOKS SIGNATURE NORWAY

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிலதர் காக்குஞ் சேணுயர் வரைப்பி
னெல்லுழு பகட்டொடு கறவை துன்று
மேழகத் தகரோ டெகினங் கொட்குங்
கூழுடை நல்லிற் கொடும்பூண் மகளிர்
கொன்றை மென்சினைப் பனிதவழ் பவைபோற்
பைங்கா ழல்கு னுண்டுகி னுடங்க
மால்வரைச் சிலம்பின் மகிழ் சிறந்தாலும்
பிலி மஞ்ஞையி னியலிக் காலத்
தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை
வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்தப் பைய
முத்தவார் மணற் பொற்கழங் காடும்
பட்டின மருங்கில்........" என்பது அது.

இப்பகுதிகளை நோக்குந்தோறும் திமிலர் முதலியோர் வாழ்ந்த இடங்கள் பெரும்பான்மையுந் துறைமுகங்களை அடுத்து இருந்தனவென்றும் வியாபாரப் பொருள்கள் வந்து குவிந்தனவென்றும் தெருக்கள் யாண்டும் பண்டசாலைகள் மலிந்து கிடந்தனவென்றும், வீடுகள் யாண்டும் வருவோர்க்குக் கொடுப்பதற்குச் சோறு முதலிய உணவுப் பொருள்கள் மல்கியிருந்தனவென்றும், வானளாவிய மாடங்கள்பல இருந்தன வென்றும் கருத்தையுங் கண்ணையும் ஈர்க்கும் அணிநலம் வாய்ந்த மகளிர் ஆண்டு வதிந்தனரென்றும் அறிகின்றோம். இதுகொண்டு இவர்களது பண்டைச் செல்வச் செழிப்பு இனிது உணரக்கிடக்கின்றது.



மேற் கூறியவற்றால் பரதரும் திமிலரும் ஒருவரே என்பதும் திமிலர் நெய்தனிலத்து வணிகர் என்பதும் தெளிவுறுகின்றது. மேலும் சிலம்பு நாற்பத்திரண்டாம் பக்கத்திற்பரதர்கடலோடிகள் எனவும் நூற்றறுப்பத்தேழாம் பக்கத்திற் பரதர் வணிகரெனவும் கட்டுரைகாதையில் *பரதன் என்றது கோவலன் முற்பெயரெனவுங் குறிக்கப்பட்டிருக்கின்றமை ஒப்பு நோக்கத்தக்கன.

வணிகராய திமிலர் தமது சொந்தத் தொழிலாம் வாணிகத்தைச் செய்து கொண்டு தென்னிந்திய நகரங்களில் வாழ்ந்தாரென அறிகின்றோம். இவர்களது வம்சவழியினர் தற்போது தென்னிந்தியாவில் யாண்டு வாழ்கின்றனரோ எனின் அதனை அறிதற்கு நிச்சயமான ஆதாரங்கள் கிடைத்தில. எனினும் போர்த்துக்கீசர் வருவதன் முன்னே திருச்செந்தூரைச் சூழ்ந்த பகுதிகளில் வணிகராய திமிலர் வாழ்ந்தனரென்றும் திருச்செந்தூர்க் கோயிலும் இவர்களுடையதாய் இருந்தது என்றும், போர்த்துக்கீசர் இவர்களது மதத்தினை மாற்ற முயன்றபோது இவர்கள் அதனை வெறுத்து, பங்களூர், கோயிற்பட்டி, அம்பாசமுத்திரம், பாபநாசம் முதலிய ஊர்க

* முந்தைப் பிறப்பில் பைந்தொடி கணவன்
வெந்திறல் வேந்தற்குக் கோத்தொழில் செய்வோன்
பரதன் என்னும் பெயரனக் கோவலன்
— சிலம்பு : 152—154 அடிகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ளிற்சென்று குடியேறினரென்றும் ஒரு நம்பக மான செய்தி கிடைத்திருக்கின்றது. ''திமிலன் அடிமைப்படுவதுமில்லை, திருச்செந்தூர் முடியசை வதுமில்லை'' என்னும் பண்டைய நாடோடிப் பழ மொழியும் ஈண்டு நோக்கத்தக்கது. போத்துக்கீசர் தாக்குதலை மீறமுடியாத ஒரு சிலர் கத்தோலிக்க மதத்தை ஏற்றுக்கொண்டனர் போலும்.

ஈழநாட்டில் வணிகராந் திமிலர் பல இடங் களில் வாழ்கின்றனர். யாழ்ப்பாணக் குடாநாட் டில், ஊர்காவற்றுறை, தோப்புக்காடு, நாவாய்த்துறை, அராலி, வட்டுக்கோட்டை, கொக்குவிலமுதலிய இடங்களிலும், திருக்கோண மலைப்பிரிவில், மல்லிகைத்தீவு, ஈச்சிலம்பற்றை முதலிய இடங்களிலும் மன்னார்ப் பிரிவில் மாதோட்டத்துக் கண்மையிலும் சலாபப் பிரிவில் திமிலை என்னும் இடத்திலும் வாழ்கின்ற னர். இவ்விடங்க ளெல்லாம் பண்டைக்காலத் திற் பெயர்பெற்ற துறைமுகங்களாயமைந்த பட்டி னங்களாய் இருத்தல் நோக்கற்பாலது.

ஊர்காவற்றுறை, தோப்புக்காடு ஆகிய இரு இடங்களில் பதினெட்டாம் நூற்றுண்டினிறுதி வரை வணிகர் குலத்தினர் தமக்குப் பண்டு தொட் டுச் சொந்தமான வாணிகத்தையும் கப்பல் கட்டு



வதையும் செய்து வந்தனர். தென்னிந்தியத்துறை முகங்களாய தூத்துக்குடி அதிராம் பட்டினம் முத லிய இடங்களுக்குப் பாய்க் கப்பல்களிற் சென்று வாணிகஞ் செய்தனர். புகைக்கப்பல் புகைவண்டி முதலிய போக்குவரத்துச் சாதனங்கள் ஏற்பட்ட இக்காலத்திற் படகு கப்பல் ஆதியவற்றின் உப யோகம் குன்றியபோதும் இவர் படகு கொண்டு புகைக் கப்பலினின்று தரைவரை இறக்குமதி செய்யுந் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஏனைய இடங்களில் வசிக்கும் இவர்களிற் பெரும்பான்மையினர் மனித சமூகத்துக்கு இன்றி யமையாத வேளாண்மை, மீன் படுத்தல் ஆதிய தொழில்களிலும், பலர் உத்தியோகங்களிலும், சிலர் வீடமைத்தற்றொழில், சுருட்டுத் தொழில் முதலியவற்றிலும் அமர்ந்திருக்கின்றனர். ஒரு சிலர் தலைமுறை தலைமுறையாகப் பேர்பெற்ற சித்த வைத்தியர்களாகவும், மாந்திரீகர்களாகவும் இருக்கின்றனர்.

கி. பி. முதலாம் நூற்றுண்டுக்குரிய பேர் பெற்ற பண்டைக்கிரேக்க நூலாசிரியர் தொலமி (Ptolemy) தமிழகத்தின் துறைமுகங்களைப் பற்றி விரித்துரைத்திருக்கின்றாரென்றும், குமரி முனையிலி ருந்துகீழ்க்கடற்கரைவரையில் கடற்றொழில் வாழ் க்கைநடத்திய பரதவர் என்ற இனத்தவரைக் 'கரி யாய்' (Kareoi) எனக் கூறிப் போந்தார் என்றும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கரியாய் என்பதன் தமிழ்வடிவம் கரையார் என்றும் ஒரு நம்பகமான வரலாற்றுக்குறிப்புக் காணப்படுகின்றது.

## 4. உணவு

நாகரிகத்தின் உன்னத நிலையில் இருந்தகாலத்திலும் வேதகாலத்திலுந் தமிழர் மீன் உணவினை உவந்து உண்டமைக்குச் சான்றுகள் உள. வாணிகத்தில் ஈடுபட்டுப் பன்னுள்களாகக் கடலிலே பயணம் செய்த வணிகராய திமிலருக்கு இவ்வுணவு ஏற்ற உணவாக அமைந்தது வியப்பன்று. செறுத்த செய்யுள் செய் செந்நாவின் வெறுத்த கேள்வியாளர் எனப் புகழப்பட்ட கபிலர் தம்மை, யானே பரிசில் மன்னும் அந்தணன் எனக் குறிப்பிட்டார். அவரை ஒரு சமயம், சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்னும் வேந்தன் கையிற்பிடித்து, உபசாரஞ் செய்தகாலை, நுங்கை மெல்லிதாய் இருப்பதன் காரணம் என்னென்று வினவ, அவர் இறைச்சிகலந்த சோற்றை உண்ணுதலன்றி, வேறு தொழிலெதுவும் செய்யாமையின் மெல்லிதாய் இருக்கின்றது எனக்குறிப்பிட்டார்.* அதனைப் புறப்பாட்டில் (14) அறியலாகும். இன்

* புறம் 117: கபிலர் கூற்றை நோக்குக.



னும், "நாய் கொன்ருற் பார்ப்பாருந் தின்பர் உடும்பு" என்னும் பகுதிகளும் உள. அரசர்கள் போர்முடித்து வந்த வீரர்களுக்கு, ஆட்டுக் கடாவை அரிந்து உணவு கொடுத்தமை சங்க நூல்களைப் படிக்குந்தோறும் அறியவருஞ் செய்தியாகும். நெய்தனிலத்தோர் தாம் பிடித்துவந்த மீனைப் பலர்க்கும் பகுத்துக்கொடுத்தல் சங்க இலக்கியங்களிற் பெரிதுங் காணப்படுகின்றது. மருதநிலத்து வாழ்ந்தோரும் மீனுணவினை விரும்பி உண்டனர்.

"தடமருப் பெருமை மடநடைக் குழவி
தூண்டொறும் யாத்த காண்டகு நல்லிற்
கொடுங்குழை பெய்த செழுஞ்செய்பேதை
சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப
வாளை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇ" எனும்

நற்றிணைப் பகுதிகளான் இஃது அறியக்கிடக்கின்றது. இதனுல் மருதநிலத் தலைவி தன் கைவிரல்கள் சிவக்கும் வண்ணம் நாயகனது அன்பைப் பெறும்பொருட்டு வாளைமீனை அரிந்துகொடுத்தமை நோக்கற்பாலதாகும். தொல்காப்பியம் பொருளதிகாரப் பதிப்பாளர் வாளையை வாளை எனவே பாடங்கொண்டனர். வாளை வாழையென மாறுதென்க.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உக்கிரபாண்டியன் காலத்தில் மதுரையில் நடைபெற்ற சங்கத்திலிருந்த புலவர்களும் அவர்கள்பின் வந்த புலவர்களும் யாத்த இலக்கியங்கள் தமிழர்வசமுள்ளன. இப்புலவர்கள் பல்வேறு சமயச் சார்பினர். நிகண்டவாதிகள் (சமணர்) புத்தர், பார்ப்பனர், அரசர், வணிகர், உழவர் முதலியோர் இவருள் இருந்தனர். தஞ் சமயச் சார்பும் இனச்சார்பும் பற்றித் தொழில் வகையிலும் உணவு வகையிலும் ஏற்றத்தாழ்ச்சி கூறிப்போந்தனர் சில ஆசிரியப் புலவர்கள்.

தமது பண்டை வரலாற்றினை ஆராய்ந்து அறிந்துகொள்ள ஒவ்வொரு தமிழ்க் குலத்தினருக்கும் உரிமையுண்டு. பல நூற்றாண்டுகளுக்கு முன்னே சமய உறைப்புடைய புலவர்கள் கூறிய உயர்வு, தாழ்வினை எல்லா மக்களின் தேவையை நோக்கும் பகுத்தறிவுள்ள தற்காலத்து மக்கள் ஏற்றுக்கொள்ளாரென்க. மனிதவர்க்கத்தின் உயர்வை நோக்குஞ் சாத்திரத்தின் (சோசலிசம்) படி அபரிமிதமான மக்களின் அபரிமிதமான தேவைகள் (Greatest good of the greatest number) என்ன என்பதை அறிந்து இத்தேவைகளைப் பூர்த்திசெய்யுந் தொழில்களே முதன்மையானவையாகக் கொள்ளல் தகுதியுடைத்தென்க. இன்று மக்கள் தொகை முந்நூற்றைம்பது கோடிக்கு



மேற்பட்டுவிட்டது. இவருள் மீனுணவை விரும்பி உண்பவரும் அதிற்றங்கியிருப்பவரும் தொண்ணூற்றென்பது வீதத்துக்கு மேலெனல் மிகையாகாது.

"Fish is one of the commonest and most prolific sourse of the much-needed preteins that this country sorely needs and needs urgently" "It is a crying shame and a sad commentary that with fish abounding all around us that the nation is starved and stinted of this indispensable item of food." — *Daily Mirror*, 1-9.65.

நமது தேசத்துக்கு அவசியமாகவும் கட்டாயமாகவுந் தேவைப்படுகின்ற புரதச்சத்து நிரம்பியிருக்கும் சாதாரண உணவு மீனே. நம்மைச் சூழவர மீன் பெருக்கமுற்றிருக்க, இன்றியமையாத இவ்வுணவுக் குறைவினால் நமது தேசம் வாட்டமுறுதல் வெட்கமுந் துக்கமுமான விஷயமாகும்.

யப்பான், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து முதலிய தேசங்களிலும், ஏன்? தமிழர் பெரும்பாலும் வசிக்கும் பரத கண்டத்திலும், ஈழநாட்டிலும் மீனுணவைப் பெருக்குவதற்கு அரசாங்கங்கள் செய்யும் பிரயத்தனங்கள் சாலச் சிறந்தனவே. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதாம் ஆண்டில் இலங்கை பத்தரைக்கோடி ரூபா பெறுமதியான மீனுணவை இறக்குமதி செய்திருக்கின்றது. நிகண்ட வாதிகள் தாமியற்றிய இலக்கியங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களிற் கூறிய உணவுக் கொள்கைகளைப் பரந்த உலகம் ஏற்றுக்கொள்ளவில்லை. இனிமேலும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதுமில்லை. உலகத்துக்குக் காரணராகிய ஒரு கடவுள் இல்லை என்று கூறுஞ் சமண சமயத்தினர், சமய உறைப் பினுலெழுதிவைத்த நாலடியார் முதலிய நூல்கள் மீனுணவைப்பற்றியும் அதனைச் சமூகத்துக்குக் கடும் உழைப்பினுலுதவும் மக்களைப்பற்றியும் கூறியதைப் பரந்த உலகம் ஒப்புக்கொள்ளுமா றில்லை. ஆதிக் கிறீத்தவர்கள் தஞ் சமய உறைப் பினுற் பரந்த நோக்குடைய இந்துக்களை அஞ் ஞானிகளென இகழ்ந்தமை இதுபோல்வதாகும்.

சமணம் தோன்றிய பரதகண்டத்திலேயே சமணர் தொகை நூற்றுக்கு அரைவீதமும் இல்லை. மீன் பிடித்தல் அமெரிக்க சனுதிபதிகளின் பொழுது போக்குகளில் ஒன்றென்பதும், பிரித்தானிய சக் கரவர்த்திகளுக்கு வழங்கப்பட்ட பட்டங்களுள் மாட்சிமை மிக்க மீன்படை எசமானனர் (Grand Master of Fishing Fleet) என்பது ஒன்றென்பதும் நோக்கற்பாலன. கி. பி. ஆயிரத்து இருநூற்றைம் பத்தாறில் சுந்தரபாண்டியன் திருமலையைக் கைப் பற்றி இணைமீன் சின்னத்தைப் பொறித்தனன். 'பெடரறிக்' கோட்டையில் இன்றும் இச்சின்னத் தைக் காணலாம்.



யப்பானில் மீன்பிடிக் கலையைப் பயிற்றுவ தற்குக் கலாபீடங்கள் பதினைந்து பல்கலைக் கழ கங்களில் நிறுவப்பட்டிருக்கின்றன. சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய "பழஞ் சைவமும், புதுச் சைவமும்" என்னும் நூலினைப் படித்து உண்மையை உணர்க.

உலகிலே சனத்தொகை பெருகிக்கொண்டு போகுமளவிற்கு நிலத்தினின்று கிடைக்கும் உணவு பெருகாமையால் மனுக்குலம் பசியால் வருந்தப் போகின்றதே என்பதை உணர்ந்த முன் னேக்கமுடைய விஞ்ஞானிகளும் தத்துவ ஞானி களும் இனிச் சமுத்திரத்தினின்று யாம் பெறும் உணவு பெருக்கமடைய வேண்டுமென எண்ணு கின்றனர். அதறகேற்ற ஆராய்ச்சிகளும் நடை பெறுகின்றன.

ஈழநாட்டில் விசேடமாகத் தமிழர் வசிக்கும் பிரதேசங்களாகிய மட்டக்களப்பு, திருக்கோண மலைப் பகுதிகளில் பௌத்த சிங்கள மக்கள் மீன் படுத்து அதனைப் பிற இடங்களுக்கு அனுப்பு வதால் மீன்விலை அவ் விடங்களில் அதிகரித திருப் பதாகவும் தூர தேசத்திலுள்ள சிங்கள முத லாளிகள் மிகச் செல்வந்தராகின்றன ரெனவும், அவர்களின் மக்கள் ஆட்சிபீடத்தில் ஏறுகின்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



றன ரெனவும் நாம் அறிகின்றோம். தமக்குப் பக்கத்திலே இருக்கும், தாம் உண்ண விரும்பும் உணவினைத் தாமே இலேசாகத் தேடி உண்ணாது பிறர் கையை எதிர்பார்த்திருக்கும் இவர்நிலை கவலத்தக்கதே. இந் நிலையைச் சிந்தித்து ஏற்ற பொருளாதார நிலையை உருவாக்குதல் தேசிய உணர்ச்சியும் இன நலப்பற்றுமுடையார் கடனாகின்றது. தமிழரின் பண்டைய உணவுக்கொள்கையையும், எல்லாத் தேசங்களிலும் இவ் வுணவுப் பெருக்கத்துக்குக் கொடுத்திருக்கும் முக்கியத்தையும் ஆராய்ந்து நோக்கி, மத உறைப்பினால், சைன, பௌத்த ஆரியர் கூறுவதைப் பயனற்ற கூற்றென விலக்கித் தமது பகுத்தறிவை உபயோகித்து உணவு விருத்தி செய்யுமாறு வாலிபர்களைத் தூண்டி அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தல் அவசியமாகின்றது.

மனித குலத்துக்கு உணவே மிக முக்கியமான தேவை. எல்லாப் பொருள்களுக்கும்முன், விலையேறப் பட்டதாகக் கணிக்கப்பட்ட பொருள் உணவே. (Food is the earelist valued thing) பரந்த உலகமெங்கும் ஒருசேர நோக்குவார்க்குத் தானிய வகை உண்டுபண்ணல், பண்ணைகள் அமைத்தல், மீன்படுத்தல் முதலிய அபரிமிதமான மக்களுக்கு வேண்டிய உணவு விருத்திக்குரிய தொழில்களே மனுக்குலம் உய்தற்கு முதலாவது வேண்டுவன என்பது புலனாகாமல் இருக்க முடியாது.



சோசலிச அளவை கொண்டன்றிப் பிறிதொரு வகையானும் தொழில்களின் உயர்வு தாழ்வினைப் புரிந்துகொள்ளலாம். அகத்தூய்மையுடன் செய்யுந் தொழில்கள் உயர்ந்தன. அகத்தூய்மை இன்றிச் செய்யுந் தொழில்கள் இழிந்தன. உடல் மேலேறும் சேற்றினையும், தலைமேல் ஏறும் கோமலக்குவியலையும் பார்த்து உழவுதொழிலின் பெருமையை எவரும் இழித்துரையார். தூய உடையினராய்ப் பகட்டாக மோட்டார் வண்டிகளில் இவர்ந்து சென்று அபின், கஞ்சா முதலிய போதைப் பொருள்களை விற்றுப் பிழைத்தலும், ஒப்பந்தவேலைசெய்வோர் வெளியொன்றுபூசி உள்ளொன்றை மறைத்தலும், இவ்வேலையை மேற்பார்வை செய்வோர் இதனைச் சரியெனக் கூறிக் கைக்கூலி பெறுதலும், பாலில் நீர் முதலியவற்றைக் கலந்து விற்றலும், மஞ்சள், கோப்பி முதலிய தூள்வகைகளிலும், பசுநெய், பொன் முதலியவற்றிலும் கலப்புச் செய்தலும், கறுப்புச் சந்தையிற் பொருளீட்டலும், மூலாம் பூசிய பொருள்களில் வஞ்சனை செய்தலும், இன்ன பிறவும் அகந்தூய்மையற்ற இழிதொழில்களாகக் குறைந்த படியிற் சேர்க்கப்பட வேண்டியனவாம். இவ்வாறன்றி உணவை விருத்தி செய்வோர் தொழில்கள் அகந் தூய்மை நிறைந்த உயர் தொழில்களாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உணவு விருத்தி சம்பந்தமாகக் கொல்லாமை யைக் குறித்து உலகப் பெருமக்கள் கொண்டிருக் கும் உண்மையான அபிப்பிராயம் எது என்பதும் நோக்கவேண்டிய விடயமாகின்றது. கொல் லாமை என்பது "ஐயறிவுடையன முதல் ஓரறி வுடையன ஈருய உயிர்களைச் சோர்ந்துங் கொல்லு தலைச் செய்யாமை" எனத் திருக்குறளிற் கூறப் பட்டிருக்கின்றது. கொல்லாமை மிகக் கொடிய பாவச் செயல்களில் ஒன்றெனக் கூறுபவருட் பெரும்பான்மையினர் சமணரும் பௌத்தரும் ஆவர்.

சமணர்தொகை இவ்வுலகில் எண்ணிக்கைக் குட்படாத தொன்றென முன்னர்க் கூறினேம். பௌத்தர் தொகை அவரிலும் கூடியது. மகா யான பௌத்தர் பெரும்பாலும் வசிக்கும், யப் பான், தாய்லாந்து முதலிய தேசங்களில் கொல் லாமை துறந்தோர்க்கே விதிக்கப்பட்ட விரதமா கும். ஏனையோர்க்கன்று. புலான் மறுத்தலும், கொல்லாமையும் திருக்குறளில் துறவறவியலில் அமைந்துள்ளவையும் இங்கு நோக்கற்பாலதாம். புல்லும் மரமும் இவைபோல்வனவும் மெய்யாற் பரிசத்தை அறியும் ஓரறிவுயிர்களென்பர் இலக் கண நூலார்.

---

# 5. சமயம்

ஆதி வணிகராய திமிலருட் பெரும்பான்மை யினர் அன்றும் இன்றும் தமது சமயமாகிய இந்து சமயத்தில் மிகப் பற்றுடையர். இவர்கள் எங்கு குடியேறினும் இந்நூலின் முன்னர்க்கூறிய முக் கடவுளர்க்கும் ஆலயங்கள் அமைத்தனர். வட் டுக்கோட்டை, கங்குவேலி ஆகிய இடங்களிற் காணப்படுஞ் சிவன்கோவில்களும், அராலி, ஊர் காவற்றுறை, தோப்புக்காடு ஆதிய இடங்களி லுள்ள முருகமூர்த்தி கோவில்களும், வேறு வேறு இடங்களில் அமைந்த அம்பாள் கோவில்களும் இவ்வுண்மைக்கு இன்றும் சான்று பகருகின்றன. திருச்செந்தூர்க் கோவிலுக்கும், வணிகர் குலத் தினருக்குமுள்ள தொடர்பினை முன்னரே கூறி னேம்.

இதுவன்றி, வணிகர் குலத்தவர், பிறகுலத் தவருடன் பொருளாதாரத்திற் சமநிலையினராய் இருந்தபொழுது, அவர்களுடன்சேர்ந்து பல ஆல யங்களிற் பெரும்பங் கெடுத்தனர். நிருவாக முறையில் வேறுபாடு கண்டதால் அவற்றிலிருந்து தாமே விலகிக்கொண்டனர்.

இக் கோவில்களுள், துரட்டிப்பனை அம்மன் கோவில், வழக்கம்புராய் அம்மன் கோவில், வட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டுக்கோட்டை கண்ணகை அம்மன் கோவில், அராலிவடக்குப் பழைய முருகமூர்த்திகோவில், அராலிதெற்கு ஆவரம்பிட்டி அம்மன்கோவில், சங்கரத்தைப் பத்திரகாளி கோவில், தோப்புக்காடு—பாலாவோடை அம்மன்கோவில் காரைநகர் கருங்காலி முருகமூர்த்தி கோவில் என்னும் பண்டைய கோவில்கள் அடங்கும்.

வணிகர் குலத்தினருள் கல்வி கேள்விகளில் மேம்பட்டவர், சமயவழிபாட்டில் பரந்த நோக்குடையவர். பிற சமயங்களின் சிறப்புக்களை மறுக்கின்றிலர். இவர்களின் கொள்கை மகாத்துமாவின் இந்து சமயக்கருத்தை ஒத்தது. மகாத்துமா பின்வருமாறு கூறுகின்றனர்.

*„இந்துசமயம் என்பது உண்மையைத் தேடுதலில் இடைவிடாமுயற்சி. அது சத்தியத்தின் சமயம். சத்தியமே கடவுள். கடவுளை மறுப்பவரை யாம் அறிவோம். சத்தியத்தை மறுப்பவரை யாம் அறிகின்றிலோம். நான் கீதையை நம்புவதுபோல் வேதாகமத்திலும் நம்பிக்கை உடையேன்.

முசல்மான்கள் தம்முட் சகோதரத்துவத்தை நிலைநாட்டி மாபெரும் வெற்றியீட்டியமையும், இந்துவாய்ப் பிறந்து இந்துவாய் இறந்த புத்த பெருமான் அவர்காலத்து இந்துசமயத்தைத்

* Eastern Religious and Western Though — Page 313



திருத்தி அமைக்கச்செய்த நன்முயற்சியும் பிறர் வாழ்வதற்காகத் தமதுநலத்தை ஒறுத்து உலகெங்கணும் கிறீத்தவப் பாதிரிமார் செய்த சேவையும், நான் பெரியவனென்னுந் தாமதகுணமுடையானெவனும் முத்தியடைதல் சாலாதெனக் கூறுஞ் சைவசித்தாந்தக் கொள்கையும், எச்சமயத்தாரும் உவந்துகொள்ளக்கூடும் உண்மைகளாகும். இச்சமயத்தோருட் சிலர் மத உறைப்பினுற்செய்த படுகொலைகளைச் சரித்திரமே கூறட்டும். யாம் விரும்புவது சமய ஒற்றுமையே.

தனக்கென ஒரு தனிச்சிறப்பும் ஏனைய சமயங்களின் சிறப்புக்களைப் பாராட்டுதலுமுடைய ஸ்ரீ இராமக்கிருஷ்ணருடைய ஞானம் வேறுதேசங்களிலன்றி ஈழநாட்டிற் கீழ்மாகாணத்திலும் விளங்குகின்றது. இவருடைய சிறந்த கொள்கைகளைப் பாராட்டும் வணிகர் குலத்தவர் பலருளர். இவையன்றி, நாவாய்த்துறையிலும், மன்னார்ப் பகுதிகளிலும் இறைவனை யாவரும் விளங்கத்தக்க இலேசான முறையில் விளக்கிக் காட்டிய இயேசுபெருமானின் திருவடிகளை வணங்குவதற்குத் தமக்கென ஆலயங்களை அமைத்த வணிகர் குலத்தினர் உளர். வணிகருள் மறுதலைக் கிறீத்தவர் (புரட்டஸ்தாந்து கிறீத்தவர்) மிகச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிலர் எனினும் இலாபங்கருதிக் கிறீத்துவ மதத்தைத் தழுவிக்கொண்டு பின் மதமாற்றஞ்செய்து அம்மதத்திற்கு எதிர்ப்புச் செய்துகொண்ட கூட்டத்தாருள் இவர்கள் சேர்ந்தோரல்லர்.

---

## 6. தாய்மொழிப்பற்று

நெய்தனிலத்து வாழ்ந்த வணிகர் குலத்தினருட் சிறந்த புலவர்கள் சிலர் இருந்தனர். சங்க நூல்களில் நெய்தற்றிணை சம்பந்தமான பாடல்களில் அரிய பெரிய உவமைகளையும் பொருணுட்பங்களையும் அமைத்துச் சென்றனர். இச் சான்றோர் வரிசையில் அம்மூவனுர், உலோச்சனுர் முதலியோர்கள் மிக முன்னணியில் வைத்து எண்ணப்படுகின்றனர். சிறந்த அறிஞரும் நற்றிணைப் பதிப்பாசிரியருமான பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் கூறுவனவற்றை இங்குத் தருவாம்.

"கீழைக் கடற்கரையைச் சிறப்பித்துப் பாடும் உலோச்சனுரும் மேலைக் கடற்கரையைச் சிறப்பித்துப் பாடும் அம்மூவனுருமாகிய இவ்விருவரும் தமிழ் நாட்டிற்கு இருபாலும் விளங்கும் இரண்டு வளரிள ஞாயிறு எனவும் இரண்டு கண்களெனவும் இரண்டு இரத்தினங்களெனவும் கூறத் தக்கவராவரெனவும் உலோச்சனுரைக் குறிப்பிடும் வழி கடலிலுள்ள பலவகை மீன்களையும் உவமை முதலானவற்ருேடு தெளிவாகக் கூறுதலான் இவர் பரதவர் மரபினர் போலுமெனவும், கூறுவதிலிருத்து இவர்கள் நெய்தனிலப் புலவர்கள் என்பது சொல்லாமலே விளங்கும்.



உலோச்சனுர் பாடிய "வடிக்கதிர் திரித்தவன் ஞாட்பெருவலை" என்று தொடங்கும் நற்றிணைச் செய்யுளைப் படிக்குந்தோறும் இவர் நெய்த நிலத்து வாழ்ந்து பிறரெவருங் கூறமுடியாத வகையில் அந் நிலத்துப் பொருள்களை இலாவகமாக எடுத்தாள்வதைக் காண்கின்ருேம். இந் நாளில், தக்கிளி என வழங்கும் வடிக்கதிரினை (வடிக்கயர்) எந்தத் தமிழ்ப் புலவரும் எடுத்தாளாத வகையில் இவர் பிரயோகஞ் செய்திருத்தல் நோக்குந்தோறும் மகிழ்ச்சி தருவதொன்ருகும்.

சங்க காலத்தின் பின்னரும் இடைக் காலத்தும் வணிகர்குலப் பெருமக்களுட் பலர் பெரும் புலவர்களாய் இருந்து நூல்கள் இயற்றியும் உரைகள் வகுத்தும் தமிழ் மொழியை ஓம்பி வளர்த்தனர்.

இருபதாம் நூற்ருண்டில் நூல்களை யாத்துப் பொருளீட்டி அப் பொருளைத் தமிழ்த் தொண்டுக்கென்றே செலவு செய்தவரும், ஆங்கிலமோகந் தலைவிரித்தாடிய நாள்களிலே கொழும்பு மாநகரில் உயர் பதவியிலிருந்த பல கனவான்கள் திந்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழின் இன்பத்தை நுகரும்படி செய்தவரும் சங்ககாலத்தில் மன்னரைப் பாடிப் பரிசில் பெற்ற புலவர்களைப் போன்று ஈழ நாட்டில் அரசியலாரால் நடாத்தப்பட்ட மரதன் ஓட்டக் கவிதைப் போட்டியில், "மணித் தாய்நாடும் மரதன் ஓட்டமும்" என்னுஞ் சிறந்த கவிதைநூலையாத்து முதற் பரிசில் பெற்றவரும், அண்மையிற் காலஞ்சென்றவருமான முதுதமிழ்ப் புலவர் நல்லதம்பி அவர்களை எவரும் அறிவர். தமிழரின் பண்டை வரலாற்றினை அறிந்து தமிழ்மொழி தமது சொந்த உரிமையென உணர்கின்ற பலர் இவர்களுள் உளர்.

இவர்கள் சங்கீதக் கலை ஆர்வத்திற் றலைசிறந்தவர். கணிசமான தொகைப் பெண்மணிகளும் ஆடவரும் இக்கலையில் மிக முன்னேற்றமடைந்துளர். பண்டுதொட்டுத் தமிழகத்தில் ஆடப்பட்டுவந்த முத்தமிழ் பொதிந்த பல நாடகங்களைச் செந்தமிழில் ஆக்கியும் நாடக நூல்கள் பலவற்றைப் பழைய ஏடுகளிலிருந்து அழிந்து போகாவண்ணம் பிரதிசெய்தும் அவற்றை இடையிடையே ஆடியும் வருபவர் வணிகர் குலத்தவர்களே.

பண்டைய நாடகங்களை ஆடிக்களிப்பதனுல் அவற்றில் உள்ள உயரிய பல தத்துவங்கள் வணிகர் வாழ்வில் மிளிர்தலையுங் காண்கின்றேம். அவற்



றுள் உண்டவீட்டுக்கு இரண்டகம் செய்யாமை, உறுதிமொழியை இறுதியுங் காத்தல், சொந்த நயத்துக்காகச் சுயமரியாதையை இழந்து தாழ்ந்து குனிந்து கொள்ளாமை; உள்ளதை உள்ளவாறு உரைக்கத் தயங்காமை, தீயோர்க்கஞ்சாமை, கொடுமையை எதிர்த்தல், செய்யுந் தொழிலின் சிறப்பினை அகந் தூய்மைகொண்டு அளவிடல் முதலிய சீரிய குணங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவாம்.

---

## 7. குணங்குறிகள்

இவர்கள் சமயாபிமானம், பாஷாபிமானம், குலாபிமானம், ஊரபிமானம், தேசாபிமான மன்றித் தந்தொழிலபிமானமும் உடையர். இவ்வபிமானங்களிலெல்லாம் இவரது சுயமரியாதை உணர்ச்சி பொங்கித் ததும்பும். தந்தொழிலைப் பற்றியாவது, தங்குலத்தைப் பற்றியாவது மதச் சார்பு, இனச்சார்புபற்றிக் குழறுபடியாகக் கூறும் எந்தச் சமயக்கொள்கையையும், எந்த இலக்கியத்தையும் முழு உலக அரங்கின் அளவையைக் கொண்டும் புதைபொருள் ஆராய்ச்சியால் இது வரை வெளிப்பட்ட தமது பண்டைய நிலையை அறிந்த அறிவைக்கொண்டும் உயர்வு தாழ்வு கணிக்குந் திறன் இவர்க்குண்டு. இதனுல் இவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கள் சுயாதீன வாழ்க்கையை எஞ்ஞான்றும் விரும்புவர். அடிமைகளாயிருந்து பின் விடுதலை பெற்றுப் பொருளாதார நிலையில் மேம்பட்ட சில தமிழ்க் குலத்தினரைக் குறித்து நாம் மகிழ்கின்றோம். சொந்த நன்மைக்காக மாய்மாலக் கிறீத்தவர்களாகிக் கல்விகற்று உயர்ந்த நிலையடைந்த பின் தம்மதத்தை மாற்றிக்கொண்டோரையும் அவர் சந்ததியினரையும்பற்றி யாம் ஏதுஞ்சொல்ல விரும்புகின்றிலேம். இவர்களுடைய போக்கிற் செல்லல் தஞ்சுயமரியாதைக்குப் பங்கமென வணிகர் வம்சா வழியினர் எண்ணினர். இதனால் இவர்கள் ஏற்றகாலத்தில் ஆங்கிலக் கல்வியைக் கற்கும் வாய்ப்பினை இழந்தனர். பொருளாதார நிலையில் ஏற்றம் பெற்றிலர். எனினும் இதனைப் பற்றிக் கவல்கின்றிலர். தமக்கு வேண்டியது சுயாதீனமே எனக்கருதி உத்தியோகத்தர் நீங்கலாக ஏனையோர் சுயாதீனத் தொழில்களையே செய்துவருகின்றனர்.

உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசி முகமன் கூறித் தம் வயிற்றுக்குச் சோறுதேடும் தொழில் வணிகர் வம்சா வழியினருக்கு மிகத்தூரமான செயலாகும்.

வணிகர் வழிவந்தோர் எஞ்ஞான்றும் வீரச் செயலுடையர். பண்டு நெய்தனிலமே போர்நிலமாக விளங்கியமைக்குப் பல சான்றுகளுள.



"தும்பைதானே நெய்தலது புறனே" என்னும் பொருளதிகாரச் சூத்திரத்திற்கு உரைகண்டோர், நெய்தனிலத்தேதான் போர் நிகழ்தல்வேண்டுமெனக் குறிப்பிடுகின்றனர். ஆண்டு வாழ்ந்த மக்கள், போர்வினையில் திறமைபெற்றிருந்தமை சொல்லவேண்டா.

"கார்த்தரங்கம் திரைதோணி சுறுகடல்மீனெறிவோர்
போர்த்தரங்கம் துறைமானுந் துறைவர்"

எனுந் திருக்கோவைப் பகுதிகள், கடற்கரையில் உள்ள தோணி முதலியன போர்க்களத்தில் நிற்கும் யானை முதலிய நால்வகைப் படைகளையும் ஞாபகப்படுத்துதலைக் குறிக்கின்றன.

---

## 8. வேண்டுதல்

வணிகர்குல இளைஞர் பரந்த நோக்கோடுகூடிய சமயப்பற்றுடையராதல் வேண்டும். தேனினுமினிய தமது சொந்த உரிமையென நினைக்கத்தக்க தமிழ்மொழிக் கல்வியில் தேர்ச்சியடைந்து ஆராய்ச்சித்திறன் அடைதல்வேண்டும். ஆங்கிலக் கல்வியைத் தெளிவுறக் கற்றுத் தம் பண்டைப் பெருமையை நடுவுநிலைமையுள்ள ஆசிரியர்களால் எழுதப்பட்ட இதிகாச நூல்கள்வாயிலாக அறிந்து கொள்ளல்வேண்டும். இக்கல்வியினால் தத்துவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஞானிகளும், விஞ்ஞானிகளும் எவற்றைப் பெரிதாக மதிக்கின்றனர், எவற்றைச் சிறியவை எனத் தள்ளுகின்றனர் என்னும் உண்மைநிலையை அறிதல்வேண்டும். உலக மக்களின் தேவையுள் முதலாவது உணவு என்பதையும் பகுத்தறிவென்னும் அளவையினல் இதுவே முக்கியத்துவம் வாய்ந்ததென்பதையும் உணர்ந்துகொள்ளல் வேண்டும்.

"உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்"

எனும் குடபுலவியனர் வாக்கும் உற்றுநோக்கத் தக்கது.

உணவுப் பெருக்கத்துக்கு உலகிலுள்ள அரசாங்கங்களெல்லாம் எவ்வித முயற்சிகள் எடுக்கின்றன என்பதைப் பத்திரிகைகள், நூல்கள் வாயிலாக அறிந்து உணவைப் பெருக்கும் வேளாண்மை செய்தல், பண்ணையமைத்தல், மீன்படுத்தல் முதலிய தொழில்களை விஞ்ஞானமுறையிலும், கூட்டுத்தாபன முறையிலும் விஸ்தரித்தல்வேண்டும். மதவெறிகொண்ட சமணர் முதலியோர் உணவு விஷயமாகக் கூறும் பயனற்ற கூற்றுக்களை உதறி வீசிவிட்டு உலக சமூகத்தின் பிரதான தேவைகள் எவை என்பதை உணர்ந்து பொருளாதார நிலையைப் பெருக்குதல்வேண்டும்.

---

# 9. உலக அரங்கிலே

வீரத் தமிழ்வாலிபர்களே, இன்று உலக அரங்கில் அமெரிக்கர் ஆள்கின்றனர்; சீனர் ஆள்கின்றனர்; சிங்களர் ஆள்கின்றனர். நூற்றுக்கணக்கான தேசங்களில் நூற்றுக்கணக்கான சாதியினர் ஆள்கின்றனர்.

இப்பாரிய உலகினில் தமிழர் தாழ்ந்தோரே. ஏனெனில் இன்று இவர்கள் ஆளும் இனம் இல்லை. எங்கணும் ஆளப்படுகின்றனர். கிராமங்களிற் பிரபுத்துவ (Feudal System) ஆட்சி இருந்தாற் போதுமானது; நமக்கு ஓர் அரசு தேவையில்லையென்ற போக்கில் நடந்துகொண்டனர் தமிழர். செயலற்ற மாயாவாத வேதாந்தத்தால் வஞ்சிக்கப்பட்டனர். சமயங்களுள்ளும், சமயக் கிளைகளுள்ளும், அவற்றின் உப கிளைகளுள்ளும் தாழ்ச்சி உயர்ச்சி கூறினர். அவரவர் சமயம் அவரவர்க்குச் சிறந்ததன்றோ! தொழிலிலும் தாழ்ச்சி உயர்ச்சி கூறினர். சமூகத்துக்கு அவசியந் தேவையான பொய், களவற்ற தொழில்கள் யாவும் சமமான சிறப்புக்குரியவை என்று பாரதப் பெருந் தத்துவஞானி ஒருவர் கூறிப்போந்தனரே!

தாழ்ச்சி, உயர்ச்சி சொன்னதால் ஏற்பட்ட விளைவென்ன? வகுப்புக்கு வகுப்பு ஒத்துழையாமை ஏற்பட்டது. வெளிப்பகையிலும் உட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பகை பெருக்கமடைந்து பகைமையை மூட்டியது. உலக அரங்கிற் பொலிவிழந்தனர் தமிழர். வாழ்க்கையென்னும் பந்தயக் களத்திற் படு தோல்வியுற்றனர்.

வாலிபரே! நம் சகோதரர்களாகிய முசல்மான்களைப் பாருங்கள். இவர்கள் தமக்குள்ளே சகோதரத்துவத்தை நிலைநாட்டினர். வெற்றி பெற்றனர். தொழில்வளத்தைப் பெருக்கினர். பெருஞ் செல்வந்தர் ஆயினர். இவ்வுலகிற் பல தேசங்களில் தலைநிமிர்ந்து ஆட்சிபுரிகின்றனர்.

இந்நூலிலே முன்னரே உலகப் பிரசித்திபெற்ற பேராசிரியர் ஒருவரின் கருத்தினை எடுத்துக் காட்டித் தாழ்ச்சி, உயர்ச்சி சொல்லுதல் ஒரு கபட நாடகமெனக் கூறினோம்.

நாம் வசிக்கும் ஒரு மூலையை நோக்குதலன்றி உலகம் முழுவதின் கருத்துக்களை நூல்கள் வாயிலாகவும், சஞ்சிகைகள் வாயிலாகவும் அறிந்து தொழில்வளத்தைப் பெருக்குதல் நம் கடனாகும்.

சமயம் மனிதனின் பித்தலாட்டம்; தொழில் வளம் பெருக்குதலுந் தேசியநலனுமே வாழ்க்கையின் குறிக்கோள் எனக்கூறி உலக அரங்கில் வல்லமைபெற்று ஆட்சி நடாத்தும் தேசங்கள் சில உளவென்பது நாமறிந்த உண்மையே. இதற்கு எதிர்மாறாகச் சமூகத்துக்கு அவசியந் தேவையான



தொழில்வளங்களையும், தேசிய நலனையும் குறைவுபடக்கூறி ஆக்கத்தையும், ஊக்கத்தையும் குறைக்குஞ் சமயக் கொள்கைகளால் பொலிவிழந்த இனங்களும் இவ்வுலகில் உண்டென்பதும் உண்மையே.

இவ்வித சமயத்தினர் உணரவேண்டியபெரியதோர் உண்மை உண்டு. அஃது எந்தச் சமயமும் வாழ்க்கையிற்கண்ட உண்மைகளை மறைக்க முடியாதென்பது. ( Religion ought not to be an escape from the realities of life )

அதிட்டவசமாய் இவ்விரு வகுப்புள்ளும் சிக்கிக்கொள்ளாதவராய்த் தேசிய நலனுக்குரிய தொழில்வளத்துக்கும், அநுசரிக்குஞ் சமயத்துக்கும் முரண்பாடில்லாத சமநிலையை உருவாக்கி வாழ்க்கையென்னும் பந்தயக்களத்தில் வெற்றி பெற்ற பல தேசங்களின் முன்னேற்றத்தை நாம் கூர்ந்து நோக்குதல் நன்றன்றோ!

இவ்விடத்து ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்குமுற்பட்ட தமிழகம் என்னும் நூலிலிருந்து சில பகுதிகளை எடுத்துக் காட்டுவாம்.

"அவர்கள் (தமிழர்) அறிஞர்களோ, மாள்வுக்குப் பின்னுள்ள வாழ்வைப்பற்றிய பகட்டொளிமிக்க வற்றல் கானற் கனவுகளில் தங்கள் நேரத்தை வீணாக்கினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வருங்காலம்பற்றிய அவர்கள் சிந்தனையின் மட்டற்ற ஆழமே தம் நிகழ்கால நிலைபற்றிச் சிந்திக்காதபடி அவர்களைத் தடுத்தன. உண்மையில் வறுமைபற்றியும், முழுநிறைதுறவுபற்றியுமே அவர்கள் பெருமைகொண்டனர். ஏனெனில் இவற்றின் மூலமே ஒருவன் அவாவை அடக்கவும், அதன்மூலம் பிறப்பிறப்பு என்னும் புயலார்ந்த கடலிலிருந்து மீளவும் முடியுமென்று அவர்கள் நம்பினர். தமிழர் தேசிய நலிவின் விதைகளை நாம் இங்கே காண்கிறோம். அவை தமிழரையும் மற்று எல்லா இந்து இன மக்களையும் வீழ்த்தி வருகிற வருகிற படையெடுப்பாளர்களுக்கெல்லாம் எளிதில் இரைகளாகும்படி செய்துள்ளன.''

---

## 10. முடிவுரை

இறுதியில் எந்தத் தேசத்தினரும், எந்தச் சனமும் முன்னேற்றம்பெற வாழ்க்கையில் எத்தகைய போக்குடையராய் இருத்தல்வேண்டுமென்பதுபற்றிப் பண்டிதர் நேரு கூறியவற்றை ஈண்டுத் தருவாம்.

"The applications of Science are inevitable and unavoidable for all countries and people today. But something more than its application is necessary. It is scientific approach, the adventurous and yet critical



temper of science, the search for truth and new knowledge, the refusal to accept, anything without testing and trial, the capacity to change previous conclusions in the face of new evidence, the reliance on observed fact and not on the preconceived theory, the hard discipline of the mind — all this is necessary, not merely for the application of science but for life itself and the solution of its many problems."

''விஞ்ஞானமுறையை உபயோகித்தல் எல்லாத் தேசத்தவர்க்கும் எல்லாச் சனங்களுக்கும் இன்றியமையாதது; தவிர்க்கமுடியாததுமாம். இம்முறையை உபயோகித்தலோடு இன்னொன்றுந் தேவையாகின்றது. அஃது உண்மையையும், புது அறிவையுந் தேடுதலில் உபயோகிக்கத் தயங்காத கண்டன முறை; நாமே பரீட்சித்தும், உபயோகித்தும் பார்க்காது எதையும் ஒப்புக்கொள்ள மறுத்தல்; கண்ட புது அறிவை ஆதாரமாகக் கொண்டு அதற்கு முரண்பட்ட பழைய முடிபுகளைக் களைதல். பழைய கொள்கைகளைவிட்டு நாம் அவதானித்த உண்மைகளில் நம்பிக்கை வைத்தல்; மனத்தைக் கட்டுப்படுத்தல் — இவையெல்லாம் விஞ்ஞானமுறையை உபயோகித்தலுக்கன்றி வாழ்க்கைக்கும் பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குந் தேவையாகின்றன.''

நமது முக்கியத்துவம் வாய்ந்த பற்றுக்கள் சில. சமயப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று என்பன அவற்றுட் சிறந்தவை;

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொழில்வளஞ் சிறக்காவிடின் இப்பற்றுக்களாற் பெரிதும் பயனின்று. ஆதலால் நன்னெறிநின்று ஆற்றுந் தொழில்களில் ஆக்கத்தையும் ஊக்கத்தையுங் குறைவுபடக் கூறும் எவ்வித கொள்கைகளையும் களைதல் ஒரு தேசமோ, ஒரு சாதியோ முன்னேற வழிவகுக்கும் என்க.

Ring out the old, ring in the new,
Ring happy bells across the Snow;
The Year is going, let him go;
Ring out the false, ring in the true.

Ring out false pride in place and flood.
The civic slander and the spite;
Ring in the love of truth and right
Ring in the common love of good.

TENNYSON

---

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்